DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com


ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road
Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial
Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1535
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday September 5, 2025

# "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்" தாயகத்திற்கு அப்பால் தமிழர் மரபையும் பண்பாட்டையும் பேணும் பணிகளை தொடர்ந்து வருகிறது"

## இயக்கத்தின் கனடாக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற "உங்களோடு இசைக்கவி ரமணன்" விழாவில் சிறப்புரையாற்றிய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம்





"1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பெற்ற ""உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்" தாயகத்திற்கு அப்பால் தமிழர் மரபையும் பண்பாட்டையும் பேணும் பணிகளை தொடர்வதைக் காண்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணத்தில்ழ அந்தக் காலப்பகுதியில் நடைபெற்ற தமிழாராச்சிய மாநாட்டினை குழப்பும் நோக்குடன் தாக்குதல்களில் ஈடுபட்ட பொலிஸாரின் செயலால் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் இழப்பின் கொடுமையை உலகிற்கு எடுத்துச் செலலும் பாரிய பொறுப்புடன் ஆரம்பிக்கப்பெற்ற இந்த அமைப்பு தற்போது உலகின் பல நாடுகளில் கிளைகளை நிறுவி அரிய சேவைகளை ஆற்றிவருவதை நான் நேரடியாகவே காண்கின்றேன்." என்றார் மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள். மேற்படி விழாவில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத் தலைவர் சிவா கணபதிப்பிள்ளையும் அகிலச் செயற்குழுவிநன் காப்பாளர் பேராசிரியர் இ. பாலசுந்தரமும் வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# GOLDENBELL PRODUCTIONS ஏற்பாட்டில் ஸ்காபுறோவில் சிறப்பாக நடைபெற்ற GALA DANCE 2025 ல் கலந்து சிறப்பித்த பிரபல நடனக் கலைஞர் SANDY MASTER



கடந்த 31-08-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள சீனக் கலாச்சார மண்டபத்தில் **GOLDENBELL PRODUCTIONS** ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்ற **GALA DANCE**-2025ல் கலந்து சிறப்பித்த பிரபல நடனக் கலைஞர் **SANDY MASTER** கனடாவில் இயங்கிவரும் திரைஇசை மற்றும் மேல்நாட்டு நடனங்களை கற்றுத் தரும் நடனப் பாடசாலைகளையும் இங்கு அதனைப் பயின்று வரும் மாணவ மாணவிகளையும் மற்றும் பெற்றோரையும் பாராட்டினார். அத்துடன் இத்தனை சிறப்பாக அன்றை நடனப் போட்டி நிகழ்ச்சிகளையும் நடத்திய **GOLDENBELL PRODUCTIONS** நிறுவனத்தையும் மற்றும் நடன ஆசிரியையும் நடனக் கலைஞருமான சிந்தியா அவர்களையும் பாராட்டினார். (தொடர்ச்சி 15ம் பக்கம்)



விஜயா யுவல்லறி நிறுவனம் நடத்திய அதிஸ்டக் குலுக்கலில் வெற்றிபெற்ற இருவருக்கு பரிசாக வழங்கிய இரண்டு தங்கச் சங்கிலிகள்

6வது அனைத்துலக திருக்குறள் மாநாடு
INTERNATIONAL THIRUKKURAL CONFERENCE
19 20 21 SEPTEMBER 2025
in TORONTO, CANADA
for more information +1 (416) 707.9104

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


13 SEPT 2025
6:30 PM
D-MEDIA
THE T GROUP REAL ESTATE
RE/MAX
THANESH SIVAGANASUNDARAM
Realtor
647-505-9207
வழங்கும்
என்றென்றும்
SPB
TICKETS $30
JUST MELODIES, MEMORIES, AND THE MAGIC OF SPB SIR - UNPLUGGED!
TAMIL ISAI KALAMANDRAM OF ONTARIO
1120 TAPSCOTT RD UNIT 3, SCARBOROUGH, ON M1X 1E8
REFRESHMENTS WILL BE SERVED
FOR TICKETS & SPONSORSHIPS
BAVAN : 647-702-7403
New Ranganas Jewellery
Cash for Gold
647 702 2159
Mr Man Maintenance
Pro Carpet Cleaning & Truck Mount Services
416 999 4842
Dr. Sabesan Thangathurai
Dental Surgeon
Tel: 416-666-7770
Email: stsabesan@yahoo.com
1585 Markham Road, Unit 105, Scarborough, ON. M1B 2W1
குணம்ஸ் Super Market
Tel: 416 288 9998
1145 Morningside Ave #32,33 Toronto, Ontario M1B0A7
NEW PREMIUM STONE LTD
Quartz, Granite, Countertop
416.858.1290
100 Melford Dr, Unit #1, Scarborough, ON. M1B 2G4
Autism Learning Centre
647 444 4033
Canadian Women Council
Individual Tax Filing
Business Tax Filing
Unincorporated and Incorporated TAXES
Tax Deductions Review
State & Federal Tax Filing
Thanam Kanagaratnam
Tax Analyst
416 (298-6718)
BANQUET HALL
Vassant
Deepa
+94 776 070 196
VS BEACHSIDE RESORT
Negombo
Sri Lanka
HELPING HANDS
SENIOR CARE
VILLA KARUNA
இரமணீயம் நுண்கலைக்கூடம்
RAMANEEYAM ACADEMY OF FINE ARTS
Mridangam | Ghatam
Kanjira | Morsing
SIVA MASTER TUTORING
416 569 1229
UTHAYAN
உதயன்
tamil one TV HD
Reflection of Canadian Tamils
Life100
INSURANCE & INVESTMENTS INC.
SINCE 2005
Vision mobile
416.844.1111
3341 MARKHAM ROAD UNIT - 119 SCARBOROUGH, ON M1X-0A5
APPLE GREEN WASH
Sakthi Soma
Operation Manager
Truck & Trailer Wash
Vehicle Interior Detailing
Sticker Removal
(416) 456-4274
(647) 781-9954
applegreenwash@gmail.com
BEHIND ME
ARE YOU LOOKING
SECURITY GUARD
WHY CHOOSE US?
Customer Service
Enhanced Safety
647-856-6977
647-472-2222
gtaoneinc@gmail.com
We customize your outfit
NORTH STYLEZ
Look Fabulous With Our Lehenga Collections
416-565-8585
northstylezmc
2900 Markham Road, Unit # 444 Scarborough, ON M1X 0C8

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## றொறன்ரோ கத்தோலிக்க மக்களின் வருடாந்த பெருவிழா

றொறன்ரோ தமிழ் கத்தோலிக்க மக்களின் வருடாந்த பெருவிழா, எதிர்வரும் செப்ரம்பர் 14ம் திகதி, நடைபெறவுள்ளது. புதுமைகளின் தாயான புனித வேளாங்கன்னி அன்னை என அறியப்பட்ட, தூய ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழா, இவ்வருடமும் வழமைபோன்று மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஸ்காபரோவில், பேர்ச்மவுண்ட் மற்றும் டன்போர்த் அவனியூ வீதிகள் சந்திக்கும் இடத்தில், இலக்கம் 131 பேர்ச்மவுண்ட் வீதியில் அமைந்துள்ள தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில், மாலை 3:30 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகும். திருப்பலியைத் தொடர்ந்து, ஆலயத்திற்கு வெளியே திருச்சுரூபப் பவனி மற்றும் அன்னையின் ஆசீர்வாதம் இடம்பெறும். அனைத்து பக்தர்களையும் கலந்துகொண்டு அன்னையின் ஆசிபெற அழைக்கிறோம்.

மேலதிக தொடர்புகளுக்கு: அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்: 416-264-6544

உதயன் கதிரோட்டம்

# செம்மணியை அகழ்வை தன் பணி போன்று தலையில் சுமந்து நின்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா அவர்கள் பதவி உயர்வுடன் செல்வது அந்தப் பணிக்கு வலுச் சேர்க்குமா அல்லது வாய் மூடவைக்குமா?

இலங்கையின் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியாகக் தற்போது இலங்கை அரசாலும் தமிழ் மக்களாலும் அதற்கப்பால் புலம் பெயர் சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளதாகக் கருதப்படும் இடத்தை அழ்வாய்வு செய்யும் பணிகளை ஆரம்பத்தில் இருந்தே தன் தலையில் சுமந்து நின்றவரும்

புகைகுழி அகழ்வு என்னும் பணியை ஒரு அரச பணியாக மாற்றி தெற்கிலிருந்து எவ்வித இடையூறுகளும் அற்ற வகையில் நகர்த்திச் சென்றவருமான நீதிபதி .ஏ. ஆனந்தராஜா அவர்களின் நிதானமானதும் நேர்மையானதுமான பணிகளை உலகத் தமிழர் பாராட்டிக் கொண்டிருந்த தருணத்தில் அவருக்கு வழங்கப்பெற்றிருக்கும் பதவி உயர்வு செம்மணி என்னும் முக்கிய பகுதியான விளங்கிய அந்த பிரதேசத்தின் அவசியத்தை அல்லது அங்கு இடம்பெறும் பணிகளை “குறைப்பு“ நடவடிக்கைகளுக்கு உள்ளாக்குமா என்னும் சந்தேகம் சாதாரண மக்களுக்கு மாத்திரமல்ல இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

உறுப்பினர்களுக்கும் எழுந்துள்ளதை மேற்படி அமைப்பு வெளியிட்டுள்ள பிந்திய அறிக்கையொன்றின் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

செம்மணி என்று எலுமபுக் கூடுகளையும் அதற்கு உரித்தானவர்களின் ஏனைய எச்சங்களையும் தொடர்ச்சியாக வெளியுலகிற்கு தினமும் காட்டும் ஒரு தளமாக விளங்கும் அந்த இடத்தை குற்றச் சம்பவம் இடம்பெற்ற பகுதியாக அறிவிக்க நடவடிக்கை எடுத்தவரும் தலைமேற் சுமந்து நின்ற நீதிவான் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா அவர்களே ஆவார்.

அவரது பதவி உயர்வு அறிவிப்பு வந்த பின்னர் மேற்படி செம்மணி அகழ்வுப் பணிகளை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டவர் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் என்றும் அவரது மேற்பார்வையில் அகழ்வாய்வுகள் இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருக்கின்ற விடயமானது பொதுமக்களுக்கும் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு சற்று ஆறுதலைத் தந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு செப்டெம்பர் 3ம் திகதி உத்தியோக பயணம் ஒன்றை மேற்கொண்ட ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க கொழும்பு சென்றவுடன் 18 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கயதை நாடே உற்று நோக்கியது அவர்களில் , முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட கோட்டை நீதிபதி நிலுபுலி லங்காபுர மற்றும் செம்மணி விவகாரங்களை இதய சுத்தியோடு மேற்கொண்ட யாழ்ப்பாண நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா ஆகியோரின் பெயர்களும் உள்ளடங்கியிருந்தன.

தற்போது செம்மணி அகழ்வாய்வை விசாரிக்கும் தற்போதைய கற்றறிந்த நீதவான் பதவி உயர்வு பெற்றால், தற்போதைய விசாரணை தொடர்பாக அவருக்குப் பின்னர் விசாரணைகளை முன்னெடுக்கும் நீதவானுக்கு தேவையான அனைத்து உதவிகளும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென, ஜனாதிபதி இந்த நியமனங்களை வழங்குவதற்கு முன்னதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட செம்மணிப் புதைகுழி குறித்த தனது முதல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறாக. இரண்டாம் கட்ட அகழ்வாய்வில் 3ம் திகதி புதன்கிழமை வரையிவரையில் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனித

புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மொத்த எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 231 ஆக உயர்வடைந்துள்ளது என்ற செய்தியும் அனைவரையும் கலக்கமடையச் செய்துள்ளது.

முன்னாள் நீதவானால் குற்றம் நடந்த இடமாக அறிவிக்கப்பட்டுள்ள புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள், நீதிக்குப் புறம்பான கொலைகளுக்கு உள்ளானவர்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பொது அதிகாரிகள் மற்றும் தங்கள் உறவுகளை இழந்ததனால் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களை துன்புறுத்துவதைத் தவிர்க்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவிக்கு உத்தரவிடுமாறுஅன்றைய தினம் (செப்டெம்பர் 03) வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் மாஅதிபருக்கு பரிந்துரைத்துள்ளது. என்ற விடயத்தை நாம் உற்று நோக்குமிடத்து இலங்கையில் இயங்கும் மனித உரிமைக் குழு தன் பணியை சீராகச் செய்கின்றது என்பதைக் காட்டுகின்றது

செம்மணி மனிதப் புதைகுழி விசாரணையில் இலங்கை பொலிஸாரும், இலங்கை இராணுவமும் “இணைந்த தரப்பினராக” அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 13 பக்க அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. விசாரணைகளை நடத்தும்போது (அதாவது, ஒரு நபர் வாக்குமூலம் அளிக்க ஏன் அழைக்கப்படுகிறார் என்பதை தெளிவாகத் தெரிவிப்பதற்காக) ஜூலை 2, 2025 திகதியிடப்பட்ட பொலிஸ்மா அதிபரின் சுவுஆ 101.ஃஊசுவுஆ 61 இலக்க சுற்றறிக்கைக்கு அமைய செயல்படுமாறும், குறித்த தவறுகள் தொடர்பிலான தெளிவான சந்தேகம் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர, செம்மணி

புதைகுழி விசாரணை குறித்து செய்தி வெளியிடும் ஊடவியலாளர்களை அழைத்து புலனாய்வு அதிகாரங்களை துஂபிரயோகம் செய்வதைத் தவிர்க்குமாறு பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரைணைப் பிரிவுக்கு (ஊவுஜனு) அறிவுறுத்தல்களை வழங்குமாறும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீண்டும் ஒருமுறை பொலிஸ் தலைவருக்கு நினைவூட்டியுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் குவியலாக 08 என்புக்கூட்டு தொகுதிகள் இன்றைய தினம்(04) அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன் புதைகுழியினுள் பிறிதொரு பகுதியில் இரண்டு என்புக்கூடுகள் சிக்கலான முறையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை புதைகுழியின் மற்றுமொரு இடத்தில் 3ம் திகதி புதன்கிழமை இரண்டு என்புக்கூடுகளுக்கு மேலாக ஒரு என்புக்கூடும் , ஒரு எலும்புக்கூட்டின் தோள்பட்டை பகுதியுடன் தொடுகையுற்றவாறு மற்றுமொரு என்புக்கூடும் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவை 4ம் திகதி அன்றைய தினம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்பதெல்லாம் ஒரு விசித்திரமான தகவல்களாகவும் அதே வேளை உள்ளங்களை அதிரவைத்து மேலும் மேலும் அதிர்ச்சி தரும் எதிர்பார்ப்புக்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கக் கூடியவையாக இருப்பதும் உண்மையே

கடந்த 2ஆம் திகதி ஒரு எலும்புக்கூட்டு தொகுதியின் தோள்பட்டையுடன் தொடுகையுற்ற நிலையில் மற்றுமொரு என்புக்கூட்டு தொகுதி அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் , 29ஆம் திகதி ஒரு எலும்புக் கூட்டு தொகுதியின் மார்பு பகுதியில் ஒப்பீட்டளவில் சிறிய எலும்பு கூடொன்றின் மண்டையோட்டு பகுதி காணப்பட்டவாறு இரு எலும்பு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை செம்மணி என்னும் இடத்தில் எவ்வாறு எமது மக்கள் பழிவாங்கப்பட்டு புதைக்கபட்டார்கள் என்பதும் வெளிச்சமாக தெரிகின்றன

இவ்வாறான் மனித புதைகுழிகள் எங்கே உள்ளது என பார்த்தால் இராணுவத்தின் மண் அணை செல்கின்ற காவலரண்களுக்கு அருகிலும் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் மற்றும் சோதனைச்சாவடிகள், சதுப்பு நிலங்களிலும் காணப்படுகின்றன. எனவே முழு அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிபதி இந்தப் பணிக்கு தொடர்ச்சியாக மேற்பார்வையிடும் அதிகாரத்தைக் கொண்டவராக விளங்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளாக இருப்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்!

**Help Wanted**

Workers needed for renovation company. Must have experience in one of the following:
- Drywall Installation - Painting
- Hardwood Installation - Bathroom Reno - Kitchen Reno

Call - Siva
416-706-8160 or 416-893-3216

**ஸ்காபுறோவில் வீடு வாடகைக்கு உண்டு**

பெலாமி-எக்ளிங்டன் (Bellamy-Eglinton) சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றின் மேல் தளத்தில் 3 அறைகளும் ஒரு குளியல் அறை மற்றும் 2 வாகன தரிக்கும் இடங்கள் (Parking) ஆகியவற்றுடன் உடனடியாக வாடகைக்கு உண்டு. வாடகை 2600 டாலர்கள் மற்றும் ஏனைய கட்டணங்களின் (Bills) அரைவாசியை செலுத்த வேண்டும்.
தொடர்புகளுக்கு:- ரவி 416-988-0965

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# தனது மதுரை மாநாட்டில் நடிகர் விஜய் கச்சதீவை மீளப் பெறவேண்டும் என்ற "பிதற்றிய" காரணத்தால்தான் ஜனாதிபதி அநுரகுமார கச்சதீவுக்குப் பயணித்தாரா?

## வரலாற்றில் முதல் தடவையாக கச்சதீவு சென்ற இலங்கை ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்ற அநுர குமார திசநாயக்க!






யாழ்ப்பாணத்துக்கு 01.09.2025 காலை வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மாலை கச்சதீவுக்கும் அவசர பயணம் மேற்கொண்டார்.

வடக்குக்கு இரு நாள் பயணமாக இன்று வருகை தந்த ஜனாதிபதி, மாலை 5 மணியளவில் ஊர்காவற்றுறையில் இருந்து கடற்படையினரின் 4 படகுகளில் கச்சதீவுக்கும் பயணமானார்.

கச்சதீவைப் பார்வையிட்ட ஜனாதிபதி மாலை 6 மணிக்கு மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இதேவேளை, தமிழகத்தில் அரசியல்வாதியாக உருவெடுத்துள்ள நடிகர் விஜய் அண்மையில் கச்சதீவை மீளப் பெறவேண்டும் என்ற சர்ச்சைக்குரிய பேச்சின் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார கச்சதீவுக்குப் பயணித்தமை அரசியல் ரீதியில் பெரிதும் பார்க்கப்படுகின்றது.





இவ்வாறிருக்க, யாழ்ப்பாணத்தில் இன்று ஒரு நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, "கச்சதீவு இலங்கைக்குரியது. அதை வேறு யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது" என்று வலியுறுத்திக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு — கிழக்குப் பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப் பல்வகைமையும் நூல் வெளியீடு யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் நடைபெற்றது!




எழுநாவின் ஏற்பாட்டில் காவேரிக்கலாமன்றத்தின் அனுசரணையுடன் விவசாயபீடத்தின் சமுதாய மேம்பாட்டுக்குழுவின் ஆதரவுடன் கலாநிதி S.J அரசகேசரியின் வடக்கு-கிழக்கு பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும் என்ற நூலின் வெளியீட்டு விழாவானது கடந்த 28.08.2025 அன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் விவசாயபீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் தலைமை உரையினை விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் கந்தையா பகீரதன் அவர்கள் வழங்க அணிந்துரையினை கிளிநொச்சி மாவட்ட முன்னைநாள் அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதிஸ்வரன் அவர்கள் வழங்கியிருந்தார்.

நிகழ்வின் தொடர்ச்சியாக நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலின் முதற்பிரதியினை எழுத்தாளரின் சகோதரி திருமதி. பூவையற்கரசி சுந்தரலிங்கம் அவர்கள் பெற சிறப்புப்பிரதிகளை அங்கிருந்த விருந்தினர்கள் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து மதிப்பீட்டு உரையினை காவேரிக் கலாமன்றத்தின் இயக்குனர் வண.பிதா வ.ஜோசுவா அவர்கள் ஆற்றியிருந்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் உயிர்ப்பல்வகைமையில் நிலைபேறான அபிவிருத்தியின் சாதக பாதக விளைவுகளை விளங்கிய நிலைபேறான இந்நூல் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. இந்நூலின் இரண்டாவது பாகத்தினை பெரிதும் எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

மதிப்பீட்டு உரையினை தொடர்ந்து நூலாசிரியர் பற்றிய உரையினை இரணைமடு விவசாய சம்மேளனங்களின் தலைவர் திரு. சிவமோகன் அவர்கள் ஆற்றியிருந்தார். ஏற்புரையினை நூலாசிரியர் கலாநிதி S.J அரசகேசரி அவர்கள் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்விற்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், JICA திட்ட அலுவலர், விவசாய திணைக்களம் சார் உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக கல்வி சார், கல்வி சாரா ஊழியர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இறுதி நிகழ்வான நன்றியுரையினை விவசாயபீடத்தின் பண்ணை முகாமையாளர் திரு. சிறிதரன் நிகழ்த்த விழா இனிதே நிறைவடைந்தது.



# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் 40ம் ஆண்டு நினைவஞ்சலி!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஸ்வநாதர் தர்மலிங்கம் அவர்களின் 40ம் ஆண்டு நினைவஞ்சலி இன்றையதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - தாவடியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் செப்டம்பர் 2ம் திகதியன்று காலை 7 மணியளவில் ஒய்வுபெற்ற தபால் அதிபர் முருகேசு சண்முகம் தலைமையில் குறித்த நினைவஞ்சலிகள் இடம்பெற்றது.

இதன்போது நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன், தமிழுணர்வும் ஈழத்தமிழர் கல்வி உரிமையும் எனும் தலைப்பில் உரையாற்றினார்.

குறித்த நினைவஞ்சலியில், வி.தர்மலிங்கத்தின் மகனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபை தவிசாளர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

23 வருடங்கள் மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம் 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார் என்பது மனதை உருக்கும் ஒரு கடந்து போன சம்பவம் ஆகும்.




# இலங்கையில்தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற "அப்பாவின் நிலம்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு சிறப்பாக நடைபெற்றது!

கவிஞர் கனக பாரதி செந்தூரன் எழுதி, கடந்த ஆண்டு தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற "அப்பாவின் நிலம்" சிறுகதைத் தொகுப்பின் வெளியீடு அண்மையில் கிளிநொச்சி திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளரும் துறைத் தலைவருமான மா.ரூபவதனன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் அவர்கள் கலந்துகொண்டிருந்ததுடன், நூல் வெளியீட்டுரையை கவிஞர் வேல்.லவன் அவர்களும், நூலுக்கான மதிப்பீட்டுரையை துணுக்காய் கல்வி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் சுந்தரலிங்கம் லோகேஸ்வரன் அவர்களும் நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம். புதிய செம்மணி வீதிச் சந்தியிலிருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியூடாக டிப்பர் வாகனங்கள் பயணிப்பதற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே அனுமதி!



யாழ்ப்பாணம். புதிய செம்மணி வீதிச் சந்தியிலிருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியூடாக டிப்பர் வாகனங்கள் முற்பகல் 6 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணிவரை பயணிப்பதற்கு முற்றாக தடை விதிக்கப்பதோடு ஏனைய பாரவூர்திகள் முற்பகல் 7 மணி தொடக்கம் முற்பகல் 9 மணிவரையும் பிற்பகல் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரையும் குறித்த வீதியூடாக பயணிப்பதற்கு தடை விதித்து பொதுப்போக்குவரத்தினை இலகுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளி சிறார்கள், பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பணிக்கு செல்லும் நேரங்கள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் ஆகியவற்றினைக் கருத்திற் கொண்டு பொதுப்போக்குவரத்தினை இலகுபடுத்தும் நோக்குடன் மேற்கூறித்த விடயங்கள் நல்லூர் பிரதேச சபையின் தீர்மானங்கள் ஆக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளன.

இது தொடர்பான அறிவித்தல் பலகைகள் வீதியில் காட்சிப்படுத்தப்பட்டுமுள்ளன. எனவே வாகனச் சாரதிகள் குறித்த விதிமுறைகளைப் பின்பற்றுமாறு நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

# இலங்கை தீவில் தமிழருக்கு நீதி இல்லை என்பதை ஜனாதிபதி அனுரவின் யாழ்ப்பாண விஜயம் உறுதிப்படுத்தியது என்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி



தமிழர் பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகள், மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்து செல்வதே தீர்வுக்கு வழிவகுக்கும் எனவும் வலியுறுத்து!

யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க செம்மணி மனிதப் புதை குழியை பார்வையிடாமல் சென்றதும் அது தொடர்பில் தெரிவித்த கருத்தும் இலங்கை தீவில் தமிழருக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்ற உண்மையை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

2ம் திகதி செவ்வாய்க்கிழமை செம்மணிப் பகுதியில் இடம்பெற்ற வன்மம் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொள்வதற்கு முன்னதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், செம்மணி மனித புதைகுழி இலங்கை தீவில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட பாரிய ஒரு இனப்படுகொலையின் சாட்சியாக விளங்குகிறது.

இவ்வாறான நிலையில் தற்போதைய அரசாங்கம் உண்மையை கண்டறிவது மட்டும் போதும் அவர்களுக்கு எதிராக தண்டனை வழங்குவதை தவிர்க்கும் செயற்பாட்டில் கடந்த அரசாங்கங்களைப் போல் இந்த அரசாங்கமும் செயலபட்டு வருகிறது.

தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போர் குற்றங்கள் என்பன தொடர்பில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்காமல் தொடர்ச்சியாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

தற்போது செம்மணியில் எலும்புக்கூடுகள் 200 ஐ தாண்டிய நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையின் கோர வடிவமாக செம்மணி மனிதப் புதைகுழி காணப்படுகிறது.

யாழ்பாணம் வருகைதந்த ஜனாதிபதி அனுர செம்மணியை பார்வையிடாமல் சென்றது பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியின் வடிவமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

70 வருடங்களாக ஆட்சி செய்த அரசாங்கங்கள் எதை செய்தார்களோ அவற்றையே ஜேவிபி என்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போதைய ஆட்சியிலும் பின்பற்றி வருகிறது.

இப்படிப்பட்ட அரசாங்கத்தின் தலைவராக இருக்கின்ற ஜனாதிபதி அனுரகுமாரவுக்கு எம்மில் சிலர் செம்மணி விவகாரத்தில் நீதி நிலைநாட்ட உதவ வேண்டுமென கடிதம் எழுதுவது முட்டாள்தனமான செயற்பாடு என தற்போது விளங்கு இருக்கும்.

ஆகவே சிங்கள ஆட்சியாளர்களால் செம்மணி மட்டுமல்ல தமிழர் பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அடுத்து செல்வதே தீர்வுக்கு வழிவகுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கில் ஜனாதிபதி திறந்துவைக்கும் திட்ட கற்களில் நிதி தொடர்பான வெளிப்படைத்தன்மை இல்லை என்கிறார் வலி கிழக்கு தவிசாளர் நிரோஷ்






ஜனாதிபதியினால் யாழில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான திறப்புவிழா கற்களில் நல்லாட்சிக்கு அவசியமான வெளிப்படைத்தன்மையும் தகவல் அறிவதற்கான சுதந்திரமும் மீறப் பட்டுள்ளது. ஆகவே அக் கற்கலில் காணப்படும் தவறுகள் உரியவாறு மறுசீரமைக்கப்படுவது மக்களின் தகவல் அறிந்து கொள்வதற்கான உரிமையினை உறுதிப்படுத்தும் என்பதுடன் அரச நிதி செலவிடப்படுவதன் வெளிப்படைத் தன்மையினையும் அதிகாரிக்கும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அன்றைய தினம் யாழிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கடவுச்சீட்டு அலுவலகம் மற்றும் விளையாட்டுத்திடல்இ துறைமுகம் என்பவற்றின் ஆரம்பப் பணிகளை மேற்கொண்டார். அவரினால் கடந்த ஆட்சியாளர்களைப் போல் ஆரம்ப நிகழ்வுகளுக்கு பெரும் பணம் செலவிடப்படாமை, எளிமையான முறையில் மேற்படி நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டமையை நாம் வரவேற்கின்றோம். எனினும் நல்லாட்சித்தத்துவம் மீறப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் திறப்பு விழாக் கற்களில் மக்களின் பணம் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரச நிதி என்பது மக்களின் பணம் ஆகும். அதனை தொகைகளைக் குறிப்பிடாது குறிப்பிட்டதனை நாம் அறிவார்ந்த பார்வையில் விசேடமான மாற்றம் என்று கூற முடியாது. அரச நிதியில் எவ்வளவு தொகை திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்பது கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படாமல் விடப்பட்டமை அரசின் நிதி தொடர்பான வெளிப்படைத்தன்மையை கேள்விக் குள்ளாக்குகின்றது. நிதி செலவிடலில் தொகைகள் வெளியிடப்படும் போதே மக்களின் நிதி காத்திரமாகப் பயன்படுத்தப்ப்ட்டதா என பொதுமக்களால் விளங்கிக் கொள்ள முடியும். ஆகவே மக்கள் தகவல்களை பெறுவதற்கான வழிமுறையை இலகுபடுத்தவதில் அரசாங்கம் தோல்விகண்டுள்ளது கவலையளிக்கின்றது. பொது நிதி தொடர்பில் பொறுப்புச் சொல்வதற்கான அரசியல் பொருளாதார ரீதியானதும் நல்லாட்சியின் அளவு கோலுக்கான கல்விசார் அடிப்படையுமாகும்.

இலங்கை போன்ற நாடுகளில் அரசாங்கங்கள் திட்டங்களை ஆரம்பிப்பதும் பின்னர் கைவிடுவதும் சகஜமாகும். அவ்வாறான நிலைக்கு போதுமான நிதித்திட்டமிடல் இன்றி அபிவிருத்திகளை அரசியல் ரீதியில் ஆரம்பிப்பதும் ஒருகாரணமாகும். அடுத்து மேலதிக நிதியின்றியும் திட்டங்கள் தடைப்படுகின்றன. சில திட்டங்கள் சரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையினால் தோல்வி அடைகின்றன. அவ்வாறான நிலையில் அப்படியாக தோல்வியடையும் கட்டுமாணங்கள் பற்றி கணக்காய்வு மேற்கொள்ளப்படும் அதேவேளை மக்களின் தீர்ப்பிற்கு அரசியல் தலைவர்கள் முகங்கொடுக்க வேண்டும் என்பது சனநாயக சம்புரதாயம். ஆகவே ஜனாதிபதின் பெயர் குறிப்பிடப்பிட்டால் திட்டத்தின் வெற்றி தோல்விகள் பற்றி மக்கள் மதிப்பிடுவது இலகுபடுத்தப்படும்.

திட்டங்களின் வெற்றி தொல்விகளின் பொறுப்புக்கூறலை வரலாற்று ரீதியில் தலைவர்கள் பெறுவர்கள் என்ற நியதியை உணர்த்தும். ஆகவே தலைவர்கள் சரியான நிபுணத்துவத்துடன் செயற்படுவதற்கு அது வழிநடத்தும். ஆகவே இவைகள் ஜனாதிபதியினால் யாழில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்ட கற்களில் மீறப்பட்டுள்ளன. எனவே இதுபற்றி அரசாங்கம் கவனத்தில் எடுத்து அவ் திறப்புவிழக்கற்களின் அருகில் நிதி செலவு அல்லது ஒதுக்கம் பற்றி வெளிப்படுத்தி உதவவேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# இரண்டாம் நாளாக பளையில் தொடரும் சர்வதேச நீதி கோரிய கையெழுத்து போராட்டம்!





செம்மணிப் புதைகுழி, வடக்கு - கிழக்கு மண்ணில் உள்ள மனிதப் புதைகுழிக்கான நீதிக்காகவும், நடைபெற்ற இனப்படுகொலைக்குமான சர்வதேச நீதி கோரிய கையெழுத்து போராட்டம் கடந்த 29ம் திகதி ஆரம்பமாகியது.

இந்நிலையில் செப்டம்பர் முதலாம்திகதி அன்றையதினம் பளை நகரப் பகுதியில் காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகிய இந்த கையெழுத்து வேட்டை இன்றையதினமும் மிகவும் இடம்பெற்றது.

இவ் கையெழுத்து போராட்டமானது தமிழ் தேசிய கட்சிகளினதும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகிறது.

இன்றைய கையெழுத்து போராட்டத்தில் பளை பிரதேச சபை உறுப்பினர் ஈஸ்வரன் டாயாளினி, சுபாஸ்கரன் சுஜீபா, மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன், பொதுமக்கள் மற்றும் சகோதர மொழியினத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி மாவட்டத்தின் மண்ணியாகுளத்தில் பற்றியெரிந்த பனங்கூடல்:

## முறைப்பாடளித்தும் நடவடிக்கை எதுவும் எடுக்க எத்தனிக்காத பொலிஸார்



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட வன்னேரிக்குளம் கிராமத்தின் மண்ணியாகுளம் குடியேற்றப் பிரதேசத்தில் உள்ள தனியார் காணியொன்றில் அத்துமீறி நுழைந்தவர்கள் அங்கிருந்த பனைமரங்களுக்கு தீ வைத்து எரித்து அழித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, மண்ணியாகுளத்தில் பெண்ணொருவருக்கு சொந்தமான 24 ஏக்கர் வயலும், பனையும் சேர்ந்த காணிக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் அங்கிருந்த நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த பனங் கூடல்களுக்கு தீ வைத்து அழித்ததுடன், சில பனைமரங்களை முற்றாக வெட்டியும் அழித்துள்ளனர்.


காணி உரிமையாளருக்கு ஊர் மக்கள் வழங்கிய தகவலை தொடர்ந்து இது தொடர்பில் பனை அபிவிருத்தி சபைக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், அவர்கள் தங்களுக்கு இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க எந்த அதிகாரமில்லை எனக் கையை விரித்ததுடன், பிரதேச செயலகத்துக்கு அறிவிக்குமாறும் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால் அக்கராயன் பொலிஸில் கடந்த 29.08.2025 வெள்ளிக்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டும் இதுவரை பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வடமாகாணத்தில் அழிந்து வரும் பனை மரங்களை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அரசாங்க உயர்மட்டங்களில் கூறிக் கொண்டாலும் சம்பந்தப்பட்ட தரப்புகள் மவுனமாக இருப்பது தொடர்பில் அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# "செம்மணி குறித்து மறைக்க எதுமில்லை" எனக் கூறிய ஜனாதிபதி, அதனை பார்வையிடாமலேயே கடந்து சென்றார்



வடக்கில் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, இலங்கையின் இரண்டாவது பெரிய மனித புதைகுழியை ஆய்வு செய்யாமலேயே கடந்து சென்றுள்ளார்.

செம்மணி மனித புதைகுழி தொடர்பாக மறைக்க எதுவும் இல்லை என ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க செப்டெம்பர் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் கூறியிருந்தார்.

செம்மணி மனித புதைகுழி தொடர்பாக இரண்டாம் கட்ட அகழ்வாய்வின் 41ஆவது நாளான 2ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றைய தினம் நான்கு எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்ட நிலையில், கண்டறியப்பட்ட மொத்த எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 222 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் இதுவரை மொத்தமாக இதுவரை 206 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.


யாழ்ப்பாண மயிலிட்டி மீன்பிடி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் மூன்றாவது கட்டத்தை ஆரம்பித்து வைக்க யாழ்ப்பாணத்திற்குச் சென்ற ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க செம்மணி மனித புதைகுழி குறித்து முறையான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறியிருந்தார்.

"செம்மணி மனித புதைகுழி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அது குறித்து முறையான விசாரணையை ஆரம்பித்துள்ளோம் எங்களிடம் மறைக்க எதுவுமில்லை."

கசப்பான கடந்த காலத்தை ஏன் நினைவில் கொள்ள வேண்டும் என்பது குறித்தும் பேசிய ஜனாதிபதி, யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு செல்லும் வழியில் செம்மணி மனித புதைகுழியை ஆய்வு செய்யாமலேயே கடந்து செல்வதை ஊடகவியலாளர்கள் காணொளி பதிவு செய்திருந்தனர்.

தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையில் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனித புதைகுழியில் அகழ்வாய்வுகள் முதல் முறையாக 2025 மே 15 அன்று ஆரம்பமானது.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனித புதைகுழி மன்னார் சதொச மனிதப் புதைகுழி ஆகும், இதில் 28 சிறுவர்கள் உள்ளிட்ட 376 பேரின் மனித மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.




# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

**Thana Manickavasagar**
Insurance Broker

THANA INSURANCE Inc.



Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."



# நீதியா அபிவிருத்தியா? தீர்வா அபிவிருத்தியா? அல்லது அபிவிருத்திதான் தீர்வா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

“நாங்கள் கேட்டது சர்வதேச விசாரணையை. அனுர தருவது சர்வதேச விளையாட்டு மைதானத்தை”. என்று முகநூலில் ஒரு பதிவு காணப்பட்டது. தமிழ் மக்கள் இறந்த காலத்துக்கு பொறுப்புக் கூறுவதற்காக அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் அரசாங்கமோ “இதோ உங்களுக்கு விளையாட்டு மைதானம்; இதோ உங்களுக்கு மயிலிட்டித் துறைமுகம்; இதோ உங்களுக்கு வட்டு வாகல் பாலம்” என்றிவ்வாறாக அபிவிருத்தித் திட்டங்களை முன்வைக்கின்றது.

அனுரகுமார ஆட்சிக்கு வந்து இந்த மாதத்தோடு ஒரு வருடம் ஆகிறது. இந்த ஒரு வருட காலப் பகுதிக்குள் வடக்கு கிழக்குக்கு அதிகமாக வந்த ஒரு ஜனாதிபதி அவர். அவருடைய அமைச்சர்களும் அவ்வாறு அதிகதடவைவந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்த இடத்தில் கச்சதீவுக்கு போன முதலாவது ஜனாதிபதியும் அவர்தான். தமிழக நடிகர் விஜய் தனது கட்சி மேடையில் வைத்து கச்சதீவைப்பற்றிப் பேசிய பின்னர் ஜனாதிபதி அங்கே போயிருக்கிறார். விஜயை சீரியஸாக எடுத்து அவர் கச்சதீவுக்கு போனாரா? அல்லது கச்ச தீவை நாங்கள் இழப்பதற்குத் தயாரில்லை என்ற செய்தியை தமிழகத்துக்கும் இந்தியாவுக்கும் உணர்த்துவதற்காக அவர் போனாரா?

இந்த வாரம் ஜனாதிபதியும் அமைச்சர்களும் வடக்கில் பல அபிவிருத்தி திட்டங்களை தொடக்கி வைத்திருக்கிறார்கள். யாழ்பாணத்தில் மயிலிட்டி துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்தி, மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம், யாழ்.கச்சேரியில் கடவுச்சீட்டு அலுவலகம் முல்லைத்தீவில் புதிய வட்டு வாகல் பாலம், இவற்றுடன் வடக்கிற்கான தெங்கு முக்கோணத் திட்டம் என்பனவற்றை தொடக்கி வைத்துள்ளார்கள். இந்த வருடத்தில் மாத்திரம் அரசாங்கம் வடமாகாணத்திற்கு 1250 கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளது என்று அனுரகுமார முல்லைத் தீவில் வைத்து கூறினார்.

நல்ல விடயம். அபிவிருத்தி வேண்டும். சந்தேகமே இல்லை. போரால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினர் தொடர்ந்தும் அந்தப் பாதிப்பில் இருந்து மீளாத ஒரு வாழ்க்கைக்குள் காணப்படுகிறார்கள். எனவே அபிவிருத்தி வேண்டும். அதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் அந்த அபிவிருத்தி எந்த நோக்கு நிலையில் இருந்து என்பதுதான் இங்கு முக்கியமான கேள்வி.

அபிவிருத்தி என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உரிமைகளின் அடிப்படையிலானது. எதை அபிவிருத்தி செய்வது? எப்படி அபிவிருத்தி செய்வது? எப்பொழுது செய்வது? எந்த அளவு செய்வது? யாரை வைத்து செய்வது? போன்று எல்லாவற்றையும் தீர்மானிப்பதற்கு அந்த மக்கள் கூட்டத்திற்கு உரிமை இருக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்களுக்குரிய அப்படிப்பட்ட கூட்டு உரிமைகளை அதாவது அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தும் இனப்பிரச் சினைக்கான தீர்வு எதுவும் எட்டப்படாத ஒரு வெற்றிடத்தில், அரசாங்கம் அபிவிருத்தியை ஒரு தந்திரமாக முன்னெடுக்கின்றதா?

இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் வரையிலும் அபிவிருத்தியை நிறுத்தக்கூடாது என்பதையும் இக்கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் எங்கே அபிவிருத்தியை சந்தேகிக்க வேண்டி வருகிறது என்றால், இனப் பிரச்சினையை ஒரு பொருளாதாரப் பிரச்சினையாக வியாக்கியானப்படுத்தி தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தினால் அவர்கள் இனரீதியாக போராட மாட்டார்கள் என்ற வியூகத்தின் கருவியாக அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் போதுதான் அதைத்தமிழ் மக்கள் சந்தேகிக்க வேண்டி வருகிறது.

இனப் பிரச்சினை ஒரு பொருளாதாரப் பிரச்சினையல்ல, தமிழ் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதனால் இனப்பிரச்சினை இல்லாமல் போய்விடாது. தமிழ் மக்கள் அபிவிருத்தியக்காக போராடுகிறார்கள் என்று கூறுவதை விடவும் அபிவிருத்தி செய்வதற்கான உரிமைக்காகப் போராடுகிறார்கள் என்பதுதான் பொருத்தமானது.

தமது அபிவிருத்தியைத் தாமே திட்டமிடுவதற்கு வேண்டிய கூட்டு உரிமைகளைக் கொண்டிராத ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் அரசாங்கம் இனப் பிரச்சினையை ஒரு பொருளாதாரப் பிரச்சினையாக வியாக்கியானப்படுத்தும் விதத்தில் அபிவிருத்தியை முன்னெடுப்பதுதான் இங்கு பிரச்சனை.

இங்கு ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்டலாம். கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்த ஜனாதிபதி மயிலிட்டி துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்தியை தொடக்கி வைத்திருக்கிறார். மயிலிட்டி துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. மயிலிட்டி துறைமுகமானது 1980 களில் வடக்கின் மிகப்பெரிய முக்கிய மீன்பிடித் துறைமுகமாக விளங்கியது. வடக்கின் மொத்த கடலுணவு உற்பத்தியில் ஆகக் கூடுதலான தொகை இங்குதான் உற்பத்தி செய்யப்பட்டது. கிட்டத்தட்ட 45 விகிதம் என்று ஒரு புள்ளி விவரம் உண்டு. வடக்கில் மட்டுமில்ல முழு இலங்கைத் தீவிலும் ஒப்பீட்டளவில் முன்னணி கடல் வாணிபத் துறைமுகமாக மயிலிட்டி காணப்பட்டது. ஆனால் இப்பொழுது அது சோபையிழந்துவிட்டது. யுத்தம் அதைத் தின்று விட்டது. யுத்த காலத்தில் அது படையினரின் கட்டுப்பாட்டுக்குள் சென்ற பின் அது வடக்குப் படைக் கட்டளை மையத்தின் ஒரு பகுதியாக மாறியது. இப்பொழுதும் அது படைத்தரப்பின் நிழலில்தான் காணப்படுகிறது. அது மட்டுமல்ல சர்ச்சைக்குரிய தையிட்டி விகாரையும் அந்த பகுதிக்குள்தான் காணப்படுகிறது. அதாவது கடந்த 16 ஆண்டுகளில் திட்டமிட்டு சிங்களமயப்படுத்தப்படும் ஒரு பிரதேசத்துக்குள் அந்த துறைமுகம் அமைந்திருக்கிறது.

எனவே அதை அபிவிருத்தி செய்வது என்பது முதலில் அந்த பகுதியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் நடந்து கொண்டிருக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலை நிறுத்த வேண்டும். அதைவிட முக்கியமாக அதற்கு முதலில் அந்த பகுதியை முழுமையாக ராணுவ மய நீக்கம் செய்ய வேண்டும்.

ஆனால் அநுர யாழ்ப்பாணம் வந்த பொழுது என்ன செய்தார்? ஒருபுறம் மயிலிட்டி துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திக்கான வேலைகளைத் தொடக்கி வைத்தார். இன்னொரு புறம் தையிட்டி விஹாராதிபதியிடம் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டார். மயிலிட்டி துறைமுகத்தின் அபிவிருத்தியும் தையிட்டி விகாரைக்கான அங்கீகாரமும் ஒன்றுக்கொன்று முரணானவை. இங்கேதான் தமிழ் மக்கள் சந்தேகப்படுகிறார்கள்.

தமிழ் மக்கள் நீண்ட கடல் எல்லையை கொண்ட ஒரு மக்கள் கூட்டம். அந்த நீண்ட கடல் எல்லை இப்பொழுது பெருமளவுக்கு இலங்கை அரச படைகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. கடற்கரைகள் நீட்டுக்கும் பயணம் செய்யும் ஒருவர் வடக்கு கிழக்குக் கடற்கரைகள் எந்தளவுக்கு கடற் படையினரின் கண்காணிப்புக்குள் உள்ளன என்பதனைக் கண்டுபிடிக்கலாம். எனவே தமிழ் கடல் தமிழ் மக்களுக்கு உரியது என்ற அடிப்படையில்தான் கடல் சார்ந்த எந்த ஒரு அபிவிருத்தியையும் முன்னெடுக்கலாம்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களின் கடல் உரிமை, நில உரிமை போன்ற அடிப்படைக் கூட்டு உரிமைகள் விடயத்தில் எதையும் கதைப்பதில்லை. அதாவது கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என்றும் சுயநிர்ணைய உரிமையைக் கொண்ட தேசிய இனம் என்றும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவர்கள் இப்பொழுதும் இல்லை. மாறாக இன முரண்பாடுகளுக்கு காரணம் முன்னைய அரசாங்கங்கள் என்பது போலவும் இப்பொழுது இன முரண்பாடுகள் இல்லை என்பது போலவும் அவர்கள் காட்டிக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

இனங்களுக்கு இடையிலான மோதல் எனப்படுவது தாங்கள் பொறுப்பேற்கத் தேவையில்லாத ஒரு இறந்த காலம் என்று பேசிய மக்கள் சக்தி தட்டிக்கழித்து விட்டுப் போக முடியாது. பொறுப்புக் கூறல் என்று வரும் பொழுது இப்பொழுது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் என்ற அடிப்படையில் அவர்கள் இறந்த காலத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும். ஏனென்றால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பே பொறுப்பு. தேசிய மக்கள் சக்தியானது அதே சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்குத்தான் தலைமை தாங்கின்றது. அதனால்தான் சர்ச்சைக்குரிய தையிட்டி விகாரையின் விகாரதிபதியிடம் அனுர ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

எனவே அனுர தெரிவு செய்யப்பட்டு கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் அவர் தலைமையிலான அரசாங்கம் வடக்கு கிழக்கில் முன்னெடுத்து வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் மக்களிடம் ஆழமான சந்தேகங்கள் உண்டு. அதிலும் குறிப்பாக தமிழ் பகுதிகளில் வடக்கைத்தான் அவர் அதிகம் குவி மையப்படுத்துவதாகத் தெரிகிறது. கிழக்கு அதைவிட குறைந்த அளவே குவிமயப்படுத்தப்படுகிறது. இதிலும் வடக்குக் கிழக்கைப் பிரித்துக் கையாளும் ஓர் உத்தி தெரிகிறது. வடக்கைச் சமாளித்தால் கிழக்கு பெரிய பிரச்சினையாக இருக்காது என்று அவர்கள் கருதுவது போலவும் தெரிகிறது. அதாவது தமிழர் தாயகத்தை அவர்கள் வெவ்வேறு பிராந்தியங்களாகப் பிரித்துக் கையாள முற்படுகிறார்கள். இந்த இடத்தில் ஒரு பழைய கதையைச் சுட்டிக்காட்ட வேண்டும். வடக்கையும் கிழக்கையும் சட்டரீதியாகப் பிரித்தது ஜேவிபிதான். அவ்வாறு பிரித்ததைக் குறித்து இன்று வரை அவர்கள் மன்னிப்பு கேட்கவில்லை. அது மன்னிப்புக் கேட்க வேண்டிய ஒரு விடயமும் அல்ல என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகம் என்ற அடிப்படை விடயத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகத்தின் பெயர்ப் பலகையில் தமிழ் இருப்பதைக் கண்டு ஒரு பகுதி தமிழர்கள் புளுகமடைகிறார்கள். புதுக்குடியிருப்பில் ஒரு வீட்டின் முன் விறாந்தையில் அனுர ஒரு குழந்தையைத் தூக்கி விட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து ஒரு பகுதி தமிழர்கள் பரவசம் அடைகிறார்கள். எது எதற்கெல்லாம் சந்தோஷப்பட வேண்டும்; எதையெல்லாம் கொண்டாட வேண்டும் என்று விவஸ்த்தையே இல்லாமல் போய்விட்டது. ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் நிற்கும் போது மட்டும் கிட்டத்தட்ட ஏழு எலும்புக்கூடுகள் செம்மணியில் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

செம்மணியும் உட்பட எல்லாப் புதைகுழிகளின் விடயத்திலும் விசாரணைகள் வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் நடக்கும் என்று அரசாங்கம் திரும்பத் திரும்ப கூறி வருகிறது. ஆனால் இந்த விசாரணைகளின் முடிவில் குற்றம் சாட்டப்படும் படைத்தரப்பு தண்டிக்கப்படுமா என்பதுதான் இங்குள்ள கேள்வி. ஏற்கனவே சில ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து வருகிற நாவற் குழி வழக்கில் - 24 பேர் ஒரு சுற்றி வளைப்பின் பின் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் - தீர்ப்பு எப்படி அமையும் என்பதனை தமிழ் மக்கள் எதிர்பார்ப்போடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கேட்கவில்லை. உண்மையைக் கண்டுபிடிக்கத்தான் அவர்கள் விரும்புகிறார்கள் என்று ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே அனுர கூறியிருக்கிறார். அவர் இப்பொழுதும் அதே நிலைப்பாட்டோடுதான் காணப்படுகிறாரா என்பதனை செம்மணி நாவற்குழி வழக்குகள் வெளியே கொண்டு வரும். அப்பொழுது கடந்த ஓராண்டு காலத்துக்குள் நிகழ்ந்த அபிவிருத்திகளுக்குப் பின்னால் இருக்கும் உள்நோக்கங்களைத் தமிழ் மக்கள் கண்டுபிடிக்கக் கூடும்.

# புலம்பெயர் மண்ணில் தமிழின் பெருமையை அடுத்த தலைமுறையும் அறிய வேண்டும்!

உலக செய்திகள் World News

## நியூசிலாந்து நூல் வெளியீட்டில் ஆசிரியர் திரு. சண் வேலுப்பிள்ளை தெரிவிப்பு

புலம்பெயர் மண்ணில் தமிழின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது என்றும், எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்துப்பணி இதற்கு உறுதுணையாக உள்ளதாக இலக்கிய ஆர்வலர், ஆசிரியர் திரு. சண் வேலுப்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து, ஓக்லாண்ட் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன. சிறப்புற நடைபெற்ற இந்நூல்கள் வெளியீட்டு விழாவில் பெருந்திரளான நியூசிலாந்து வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

ஓக்லாண்ட் மாநகரில் உள்ள மவுண்ட் ரோஸ்கில் போர் நினைவு மண்டபத்தில் கடந்த ஆகஸ்ட் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு நூல்களின் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழாவின் தலைமை உரையில் அவர் பேசுகையில் கூறியதாவது, புத்தகம் வாசிப்பு என்பது மிக முக்கியம் ஆகும். புத்தகங்கள் நம்மை சரியான திசையில் அழைத்து செல்லும். படிக்க, படிக்க சிந்தனைகள் விரிவாக்கும். புத்தகம் படிப்பதனால் நமது எதிர்கால தலைமுறையினர் சரியான திசையில் அழைத்து செல்லப்படுவார்கள் என நம்பலாம்.

எழுத்தாளர்களின் எழுத்துக்கள் சமூக சிந்தனையை மேம்படுத்துகிறது. அத்துடன் சமூக மக்களின் நலனுக்காக எழுத்தாளர்கள் எழுத வேண்டிய கடமையும் உள்ளது என்றும் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் சர்வதேச விவகாரங்களை ஆவணப்படுத்துகின்றன என்றும் திரு. சண் வேலுப்பிள்ளை அவர்கள் தெரிவித்தார்.

புலம்பெயர் மண்ணில் தமிழை மீட்டெடுக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். நமது மொழி, கலாசாரம் அழிந்து போய் விடக்கூடாது. அதற்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு அவசியம்.

நமது ஈழத்து இலக்கியம், கருத்தாளமிக்க படைப்புக்கள் தமிழின் பெருமையை வெளிக்காட்டுகின்றன. அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது என இந்நிகழ்வில் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா தனது ஏற்புரையில் பேசினார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வு திரு. சண் வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டு விழாவில் அறிமுக உரையை திரு. ரமேஷ் செல்வகுமார் அவர்கள் உரையாற்றினார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை ஓக்லாண்ட் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் சிறப்புற பாடினர்.

அத்துடன் ஆறு நூல்களின் ஆய்வுரைகளை திரு. சிவசரவணபன் சர்வேஸ்வரன், திரு. பூபாலசிங்கம் பிரதீபன், திரு. கௌரிசங்கர் சுதந்திரபாலன், திரு. பிரேம்குமார் கந்தசாமி, திருமதி. வித்தியா நந்தகுமார் மற்றும் திருமதி. தமிழினி வாமதேவன் ஆகியோர் வழங்கினர்.

அத்துடன் இந்நிகழ்வில் சிறப்புரையை திரு. மேவின் கொன்ஸ்ரன்ரைன் அவர்களும் உரையாற்றினார். நிகழ்வின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.

# ஜெர்மனி பயண அனுபவங்களை பகிர்ந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தமிழகத்தின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்துக்குத் துணை நிற்கும் ஐரோப்பியப் பயணம்! தமிழ் உறவுகள் அளித்திட்ட அன்பும் - ஜெர்மனியில் ஈர்த்த முதலீடுகளும் கொடுத்திருக்கும் ஊக்கத்துடன் இங்கிலாந்து வந்தடைந்திருக்கிறேன். இந்தப் பயண அனுபவங்களை உடன்பிறப்புகளுடன் பகிர்கிறேன். ஆகஸ்ட் 30-ந்தேதி இரவு ஜெர்மனியின் டசெல்டோர்ஃப் விமான நிலையத்தில் தரையிறங்கினோம். தமிழர்கள் குடும்பம் குடும்பமாக வந்து நின்று வரவேற்பளித்தனர். குழந்தைகள் பதாகை ஏந்தி அன்பைப் பொழிந்தனர்.

ஆகஸ்ட் 31 மாலை நம் தமிழ்ச் சொந்தங்களுடனான சந்திப்பு நேரம். பின்னர், அறிவாலயமாகத் திகழும் கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை நூலகத்திற்குச் சென்றேன். நாம் இரண்டு முறை அளித்த நிதியைச் சரியாகப் பயன்படுத்தி, ஜெர்மனியில் தமிழ்ப் பணி தொடர்கிறது. செப்டம்பர் 1-ந்தேதி டசல்டோர்ஃப் நகரில் ஐந்து நிறுவனங்களுடன் தனித்தனி சந்திப்புகள்.

ரூ.3201 கோடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான எம்ஓயூ-க்கள் போடப்பட்டன. அருகிலோர் கார் மியூசியம்! அங்கு உலகின் முதல் கார் உள்ளிட்ட பலவகை கார்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.



பின்னர், முதலீட்டாளர்கள் மாநாட்டில், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் 26 நிறுவனங்களுடன் 15,320 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் 7020 கோடி ரூபாய் முதலீட்டுக்கான எம்ஓயூ-க்கள் கையெழுத்தாகின. செப்டம்பர் 2-ந்தேதி என்ஆர்டபிள்யூ-வின் மினிஸ்டர் பிரசிடென்ட் ஹென்ரிக் வுஸ்ட் என் மீது அன்புகொண்டு, நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு தனது அரசின் உயரதிகாரிகளுடன் தனது கான்வாயையும் அனுப்பியிருந்தார். வாசலிலேயே காத்திருந்து வரவேற்றார் அவர். அங்கிருந்த விசிட்டர் புத்தகத்தில், என்ஆர்டபிள்யூ - தமிழ்நாடு இணைந்து வெற்றிபெறுவோம் என எழுதிக் கையெழுத்திட்டேன். திட்டமிட்டபடி வெற்றிகரமாக அனைத்தும் நிறைவேறிய மகிழ்வுடன், லண்டன் நகருக்கு விமானத்தில் பறக்கத் தொடங்கினேன் என்று புகைப்படங்களை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

# பி.ஆர்.எஸ். கட்சியில் இருந்து சந்திரசேகர ராவ் மகள் கவிதா விலகல்

பாரதிய ராஷ்ட்ரிய சமிதி கட்சியின் (பி.ஆர்.எஸ்.) தலைவரும், தெலுங்கானா முன்னாள் முதல்-மந்திரியுமான சந்திரசேகர ராவின் மகனான கே.டி. ராமராவ் மற்றும் மகள் கவிதா இடையே மோதல் நீடித்த நிலையில், கட்சியில் இருந்து கவிதா இடைநீக்கம் செய்யப்பட்டார். பி.ஆர்.எஸ். கட்சியை அழிக்கும் வகையில் சிலர் செயல்படுவதாக தமது அண்ணன் மீது கவிதா அண்மையில் குற்றம் சாட்டியிருந்தார். முன்னதாக டெல்லி ஆம் ஆத்மி அரசின் மதுபான ஊழல் வழக்கில், கவிதா கைது செய்யப்பட்டார். பி.ஆர்.எஸ். கட்சியின் தலைவர் சந்திரசேகர ராவும் வீட்டில் வழுக்கி விழுந்ததால் உடல் நலம் குன்றினார். கட்சி இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டது. இந்த சூழ்நிலையில் கட்சியின் செயல் தலைவராக இருந்த கே.டி.ராமராவ், தலைமைப்பதவியை குறிவைத்து காய் நகர்த்த தொடங்கினார். இதையறிந்த கவிதா, ஜாமினில் வெளியே வந்ததும் கட்சிக்குள் நடக்கும் விவகாரம் குறித்து தனது தந்தைக்கு கடிதம் எழுதினார். ஆனால் சந்திரசேகர ராவ், தனது மகன் பக்கமே நின்றார். கட்சியின் பல நிர்வாகிகள் ராமாராவ் கட்டுப்பாட்டுக்குள் வந்தனர். கட்சியின் தலைமைப் பொறுப்பை ராமாராவுக்கு கொடுக்கக்கூடாது என்று கவிதா பகிரங்கமாகவே தெரிவித்தார்.

பனிப்போராக இருந்து வந்த மோதல், ஒரு கட்டத்தில் வெடித்தது. ஆட்சியில் இல்லாத நேரத்தில் இதுபோன்ற வாரிசுப் போட்டி கட்சியை பலவீனமாக்கும் என மூத்த தலைவர்கள் அறிவுறுத்தினர். ஆனாலும் இரு தரப்பினரும் தங்களது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தனர். வாரிசுப்போட்டியின் உச்சபட்சமாக, தனது மகளான கவிதாவை, கட்சியில் இருந்து சந்திரசேகர ராவ் சஸ்பெண்ட் செய்தார். இதனை அக்கட்சியின் பொதுச்செயலாளர்களான டி.ரவீந்தர் ராவ், சோமா பாரத் குமார் ஆகியோர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தனர். அந்த அறிக்கையில், கவிதாவின் சமீபத்திய நடத்தை மற்றும் அவரது கட்சி வி-ரோத நடவடிக்கைகள் கட்சியை பெரிதும் பாதித்துள்ளது. இதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பி.ஆர்.எஸ். கட்சியில் இருந்து விலகுவதாக கவிதா இன்று அறிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கவிதா, "எனக்கு பதவிகள் மீது பேராசை இல்லை. நான் பி.ஆர்.எஸ். கட்சியில் இருந்து ராஜினாமா செய்கிறேன். சட்டமன்ற சபாநாயகரிடம் எனது ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளேன். சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு நான் பல்வேறு திட்டங்களில் பணியாற்றினேன். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடுகளுக்காகவும், தெலுங்கானாவில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான பிற போராட்டங்களிலும் பி.ஆர்.எஸ் கொடியை ஏந்தியபடி பங்கேற்றேன். இவை எப்படி "கட்சி விரோத" செயல்களாக மாறும் என்பது எனக்கு புரியவில்லை" என்று தெரிவித்தார்.



# நிலநடுக்கத்தால் பாதிப்பு: இந்தியா அனுப்பிய 21 டன் நிவாரணப் பொருட்கள் ஆப்கானிஸ்தான் சென்றடைந்தன

ஆப்கானிஸ்தானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 6.0 ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இடிபாடுகளில் சிக்கி ஏராளமான மக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். இதுவரை 1400-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், 2500-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தால் மக்கள் உயிரிழந்த செய்தி அறிந்து கடும் வேதனையடைந்தேன். ஆப்கானிஸ்தானுக்கு மனிதாபிமான அடிப்படையில் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய இந்தியா தயாராக இருப்பதாக இந்திய பிரதமர் மோடி தெரிவித்திருந்தார். இந்த நிலையில், இந்தியா 21 டன் நிவாரண உதவிப் பொருட்கள் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைத்தது. இந்தியா அனுப்பி வைத்த நிவாரணப் பொருட்கள் ஆப்கானிஸ்தான் சென்றடைந்ததாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். போர்வைகள், கூடாரங்கள், சுகாதாரப் பொருட்கள், நீர் சேமிப்பு டேங்குகள், ஜெனரேட்டர்கள், சமையலறை பாத்திரங்கள், சிறிய நீர் சுத்திகரிப்பான்கள், அத்தியாவசிய மருந்துகள், சக்கர நாற்காலிகள், நீர் சுத்திகரிப்பு மாத்திரைகள் உள்ளிட்டவைகளை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

# விஷ்ணு எடவன் இயக்கத்தில் நடிக்கும் சியான் விக்ரம்

நடிகர் விக்ரமின் நடிப்பில் கடைசியாக வெளியான படம் "வீர தீர சூரன்". இப்படம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியை பெறவில்லை என்றாலும் விக்ரமுக்கு பாராட்டுகளை பெற்றுத்தந்தது. இதையடுத்து விக்ரம் தனது அடுத்தடுத்த படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில், தற்போது நடிகர் விக்ரம், கமர்ஷியல் படங்களை கொடுக்கும் இயக்குனர் லோகேஷ் கனகராஜிடம் பல ஆண்டுகளாக பணியாற்றிய விஷ்ணு எடவனுடன் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. விக்ரம்- விஷ்ணு எடவன் இணைந்துள்ள இப்படத்தை வேல்ஸ் நிறுவனம் தயாரிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. இயக்குனர் விஷ்ணு எடவன் தற்போது கவின் மற்றும் நயன்தாரா நடிப்பில் உருவாகி வரும் "ஹை" படத்தை இயக்கி வருகிறார். விக்ரம், லியோ போன்ற படங்களுக்கு விஷ்ணு எடவன் பாடல்களை எழுதியுள்ளார். "நான் ரெடி தான்" பாடல் மூலம் ரசிகர்கள் மத்தியில் விஷ்ணு எடவன் பிரபலமாகி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அலட்சியமாக பதில் கூறிய நன்னீர் திட்ட அதிகாரியான பெண் – வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் முறுகல் நிலை!



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் தாளையடி நன்னீர் திட்ட நிறுவன அதிகாரிகளுக்கும் பிரதேச மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் தாளையடி நன்னீர் திட்ட நிறுவனம் வீதிகளை அகழ்ந்து நன்னீர் குழாய்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் குடியிருப்பு பகுதிகள் காணப்படும் வீதிகளுக்கு அருகில் வீதிகளைக் அகழ்ந்து குழாய்களை அமைத்து வருகின்றனர்.

குழாய்களை அமைத்த பின் குறித்த வீதிகளை புனர்நிர்மானம் செய்யாமல் அலட்சியமாக விட்டு செல்கின்றனர் இதனால் மருதங்கேணி உள்ளக வீதிகள் பெரும் சேதத்துக்குள்ளாகி பயணிக்க முடியாத நிலையில் உள்ளது.

கனரக வாகனங்கள் உள்வீதியால் பயணிக்க தடை காணப்படுகின்ற வேளையிலும் கனரக வாகனங்களை உள்வீதி ஊடாக கொண்டு வந்து வீதிகளை சேதப்படுத்தியுள்ளனர்.

உரிய முறையில் மருதங்கேணி பிரதேச மக்களால் நன்னீர் திட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் கடந்த ஆறு மாதங்களாக பொய் வாக்குறுதிகளை கொடுத்து மக்களை ஏமாற்றி வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

மக்களின் கோரிக்கையை அலட்சியப்படுத்தி விட்டு நன்னீர் திட்ட அதிகாரிகள் ஏனைய பகுதியில் தமது வேலையை முன்னெடுத்துக் கொண்டிருந்த வேளை குறித்த இடத்தில் அதிகளவான இளைஞர்கள் குவிந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் சிறிது நேரம் பதட்டம் நிலவியது.

இளைஞர்கள் குறித்த அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு உடனடியாக வேலையை நிறுத்துமாறு பணித்ததுடன் நீங்கள் சேதப்படுத்திய வீதியை புனர்நிர்மாணம் செய்து தந்த பிறகு ஏனைய வேலைகளை தொடருமாறு அப்பகுதி இளைஞர்களால் அறிவுறுத்தப்பட்டது.

உடனடியாக குறித்த பகுதிக்கு வரவழைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினரும், தாளையடி நன்னீர் திட்ட மக்கள் தொடர்பாடல் அதிகாரியுமான திருமதி. பரிதா மோட்டார் சைக்கிளை விட்டு கீழே இறங்காமல் தான் தோன்றித்தனமாக பதில் அளித்ததால் இளைஞர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு மேல் அதிகாரியை அழைத்தனர்.

குறித்த இடத்திற்கு சென்றிருந்த தந்த மேலதிகாரி ஒருவர் செப்டம்பர் 2ம் திகதியன்று காலை 9 மணிக்கு முன்பு உரிய பதிலை வழங்குவதாக கூறிவிட்டு தாம் மேற்கொண்ட ஏனைய வேலைகளையும் நிறுத்திவிட்டுச் சென்றனர்.

அங்கு சென்றிருந்து பருத்தித்துறை பிரதேச சபையின் தமிழரசு கட்சி உறுப்பினர் வேலாயுதம் சசிகாந்த், குறித்த வீதியை பார்வையிட்டதுடன் குறித்த வீதி மிகப் படுமோசமான முறையில் காணப்படுவதாக தெரிவித்தார்.

பயணம் செய்ய முடியாத அளவு அந்த வீதியைக் கிண்டி சேதப்படுத்தி விட்டு அலட்சியப் போக்குடன் அதிகாரிகள் நடந்துகொள்வதாகவும் கண்டித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு வாக்குகேட்டு வாசல் படி ஏறி வந்த குறித்த தேசிய மக்கள் சக்தி அதிகாரி தற்போது வெற்றி பெற்ற பிறகு மக்களை மதிக்காமல் மக்களது கருத்துக்களை இறங்கிவந்து கேட்டு அறியாமல் மோட்டார் சைக்கிளில் இருந்தபடியே தான் தோன்றித்தனமாக நடந்து கொள்வதாக மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

# இலங்கை ராஜபக்ச "ராஜ்யத்தில் நான்கு திருடர்கள்" மாத்திரம் இல்லை

## எண்ணிக்கையில் நாற்பதற்கு மேலாகலாம் என்பதுதான் அநுர அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு



நல்லாக ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் களுத்தில் இப்படி துண்டு கட்டி இருப்பவர்கள் மக்கள் பணத்தை கொள்ளையடித்த மகா மகா திருடர்கள்.

சஷேந்திர ராஜபக்ஷவுக்கு 4000 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகள் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி மோசடி வழக்கில் தற்போது கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சஷேந்திர ராஜபக்ஷவிடம், ரூபாய் 4000 கோடி பெறுமதியான சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷத்தின் மூத்த சகோதரரும், முன்னாள் அமைச்சருமான சமல் ராஜபக்ஷத்தின் மகனான சஷேந்திர ராஜபக்ஷ, முதலில் ஊவா மாகாண சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு அரசியலில் நுழைந்தார்.

பின்னர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, பாராளுமன்ற உறுப்பினராகவும், இராஜாங்க அமைச்சராகவும் பணியாற்றினார்.

அரசியலைத் தவிர, வாழ்வில் வேறு எந்தத் தொழிலும் செய்யாத சஷேந்திர ராஜபக்ஷ, 15 வருடங்கள் போன்ற ஒரு குறுகிய காலகட்டத்தில், ரூபாய் 4000 கோடி பெறுமதியான சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகளை வைத்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவை அனைத்தும் ஊழல் பணப் பரிமாற்றங்கள் மூலம் சம்பாதித்த சொத்துக்கள் என்பதாக, இப்போது தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அவர் பெயரில், எச்.எஸ்.பி.சி வங்கியில் 1005013081001 என்ற எண் கொண்ட வங்கிக் கணக்கு வழியாக, பல ஊழல் பணப் பரிமாற்றங்கள் நடந்துள்ளதாக கூறப்படுகிறது.

அவரிடம், கோடிக் கணக்கு மதிப்புள்ள, டீஆறு கார், ஏ8 வகை கார், நிஷான் வகை பெட்ரோல் கார், யாரிஸ் வகை கார் என, ஆக நான்கு ஆடம்பர மோட்டார் வாகனங்கள் உள்ளன.

இவை அனைத்தும், மாத்தறை வித்தாரந்தெனியாவில் வசிக்கும், மனோஜ் ஏகநாயக்க என்ற, சஷேந்திர ராஜபக்ஷவிடம் பணிபுரியும் எழுத்தாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவர் இவ்வளவு வாகனங்கள் வாங்க முன் சாதாரண ஒரு வாகனம் கூட வாங்கும் பொருளாதார தர்த்தில் உள்ள ஒருவர் அல்ல.

அந்த மோட்டார் வாகனங்களை, மனோஜ் ஏகநாயக்க என்ற பெயரில், சஷீந்திர ராஜபக்ஷ பதிவு செய்திருப்பது, ஏதேனும் சட்டப் பிரச்சனை எழுந்தால், அதிலிருந்து தப்பிப்பதற்காகவே. ஆனால் அவை அனைத்தும் இப்போது போலீஸ் விசாரணைகளுக்கு உட்பட்டுள்ளன.

சஷீந்திர ராஜபக்ஷவிடம், தற்போது, நுகேகொடை, நாவல வீதியில், நந்த மாவத்தையில், ரூபாய் 4000 இலட்சம் மதிப்புள்ள ஒரு சொகுசு வீடும், நிலமும் உள்ளது.

மேலும், நுகேகொடை, பாலவத்த வீதியில், ரூபாய் 1100 லட்சம் மதிப்புள்ள ஒரு வீடு உள்ளது.

கொழும்பு 7, ரோஸ்மீட் பிரதேசத்தில், 6.5 "பேர்ச்" அளவுள்ள நிலத்தில், 4 அடுக்கு கொண்ட ஒரு ஆடம்பர வீடும் உள்ளது. அதன் மதிப்பு ரூபாய் 5500 இலட்சம் ஆகும்.

தெஹிவாலாவில் 24 பெர்ச் அளவுள்ள ஒரு நிலம் உள்ளது அதன் மதிப்பு ரூபாய் 2400 இலட்சம் ஆகும். நாராஹேன்பிட்டத்தில் 14 பெர்ச் அளவுள்ள ஒரு நிலம் உள்ளது. அதன் மதிப்பு ரூபாய் 2000 இலட்சம் ஆகும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான, பத்தரமுல்லாவில் 70 பெர்ச் அளவுள்ள ஒரு நிலத்தை, சஷேந்திர ராஜபக்ஷ, தனது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தவறான ஆவணங்களை உருவாக்கி, தனது பெயரில் பெற்றுள்ளார். அதன் மதிப்பு ரூபாய் 7000 லட்சம் ஆகும்.

மொனராகல, சிரிகல பாராவில், இன்னொரு சொகுசு வீடும், இடமும் உள்ளது அதன் மதிப்பு ரூபாய் 3000 இலட்சம் ஆகும்.

தெஹிவாலாவில் மேலும் 10 பெர்ச் அளவுள்ள ஒரு நிலம் உள்ளது. அதன் மதிப்பு ரூபாய் 500 இலட்சம் ஆகும். பத்தரமுல்ல, பெலவத்த பிரதேசத்திலும், மேலும் 20 பெர்ச் அளவுள்ள ஒரு நிலமும், வீடும் உள்ளது.

அதேபோல், சஷேந்திர ராஜபக்ஷவுக்கு சொந்தமான, சீதுவ பிரதேசத்தில் இருந்த ஒரு வீடும், நிலமும், ரூபாய் 3000 இலட்சத்திற்கு, சமீப காலத்தில் விற்கப்பட்டுள்ளது.

இவை தவிர, சஷீந்திர ராஜபக்ஷவிடம் கதிர்காமம் பிரதேசத்தில் ஒரு ஹோட்டல் உள்ளது. அதன் பராமரிப்பு பணிகளை, மனோஜ் ஏகநாயக்க என்ற நபர் நடத்துகிறார்.

சஷீந்திர ராஜபக்ஷவிடம், ஆஸ்திரேலியாவில் சொகுசு வீடுகள் இரண்டு உள்ளன. அவற்றை அங்கு அவரது மகன் கண்காணிக்கிறார்.

தற்போது இலஞ்ச விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வரும், சஷேந்திர ராஜபக்ஷவின் சொத்துக்களில் ஒரு பகுதி மட்டுமே இவை. அவரிடம் இவற்றை விட அதிகமான சொத்துக்கள் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

அந்த சொத்துக்கள் அவர் பெயரிலும், அவருக்கு நெருக்கமான மற்ற நபர்களின் பெயரிலும் இருப்பதாக ஊகிக்கப்படுகிறது. அதனால், அந்த விவரங்கள் குறித்து முழுமையான விசாரணை ஒன்றை, தற்போது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.



இலங்கை ராஜபக்ச "ராஜ்யத்தில் நான்கு திருடர்கள்" மாத்திரம் இல்லை. எண்ணிக்கையில் நாற்பதற்கு மேலாகலாம் என்பதே அநுர அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு.

**சிங்கள மொழியில்**
**- ஸ்ரீ லால் பிரியந்த**

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# ஜெனீவா இராஜதந்திர போரில் ஜெயிக்கப் போவது யார்...?




**"நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலில் அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு,கிழக்கு தமிழ் மக்கள் அளித்த பேராதரவே ஜெனீவாவில் இலங்கை அரசுக்கு எதிராக தமிழ் தரப்புக்கள் அமைக்கும் வியூகங்களை எல்லாம் உடைத்தெறியப் போகின்றது."**


---------------------------------------------------------------------- பாலா ---

60ஆவது ஜெனீவா கூட்டத் தொடர், எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகி ஒரு மாதம் வரையில் நடைபெறவுள்ளது. ஜெனீவா அமர்வு நெருங்கிக்கொண்டிருக்கும் நிலையில் அதனை எதிர்கொள்வதற்காக இலங்கையில் சிங்களவர், தமிழர் தரப்புக்கள் ஏட்டிக்கு போட்டியாக தங்களை தயார்படுத்தி வருகின்றன. ஜெனீவாவில் தங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தகர்த்தெறியும் வகையில் இலங்கை அரசு நகர்வுகளை முன்னெடுத்துள்ள அதேவேளை ஜெனீவா பொறிக்குள் இலங்கையை சிக்க வைப்பதற்கான காய் நகர்த்தல்களை தமிழர் தரப்புகள் முன்னெடுத்துள்ளன. இவ்வாறாக இரு தரப்புக்களும் ஜெனீவா இராஜதந்திர போருக்கு தமது தரப்பை வலுப்படுத்துவதற்கான உள்நாட்டு, வெளிநாட்டு ஆதரவு திரட்டல்களிலும் அணி சேர்ப்பிலும் தீவிரமாக களமிறங்கியுள்ளனர்.


நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வில் செம்மணி உள்ளிட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மனிதப் புதைகுழிகள், வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்டோர், இராணுவத்திடம் கையளிக்கப்படட நிலையில் காணாமலாக்கப்பட்டோர் மற்றும் இராணுவ, பௌத்த நில ஆக்கிரமிப்புக்கள், அரசியல் கைதிகள் ,மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் தமிழர் தரப்புக்கள் இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்கத் தயாராகியுள்ளன. இதற்காகவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் வோல்கர் டர்க் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் அவரை செம்மணிக்கும் வருகை தரக்கோரி நடத்தப்பட்ட தொடர் போராட்டமும் அதன் விளைவாக அவர் செம்மணி சென்று மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட்டதும் தமிழர் தரப்புக்கு சாதகமாகவே அமைந்துள்ளது. அதுமட்டுமன்றி ஐ.நா. வுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தொடர் போராட்டங்களையும் கையெழுத்து வேட்டை போராட்டங்களையும் தமிழர் தரப்பு முன்னெடுத்துள்ளதுடன் ஐ.நா. சபை உறுப்பு நாடுகளின் ஆதரவையும் கோரியுள்ளன.

அதேவேளை இலங்கையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத்துக்கான தேர்தலில் தமது கட்சிக்கு தமிழ் மக்கள் கொடுத்த பேராதரவையும் இலங்கையில் நீதியையும் சட்டத்தையும் நிலைநாட்டுவதில் சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்ற வகையில் முன்னாள் ஜனதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்த விடயத்தையும் அதன் தொடர்ச்சியாக ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர்கள் பலர் தொடர்ச்சியாக கைதாவதையும் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர, அரசுக்கு எதிரான போராட்டங்களைக்கூட சுதந்திரமாக முன்னெடுக்க தமிழ் மக்களுக்கு தமது அரசு அனுமதியளித்துள்ளதையும் செம்மணி மனிதப்புதைகுழி உள்ளிட்ட அகழ்வுகள், விசாரணைகளுக்கு தமது அரசு அளித்துவரும் நிதியுதவிகள், சுதந்திரத்தையும் பயங்கரவாத தடைச் சட்ட நீக்கத்தையும் முதன்மைப்படுத்த இலங்கை அரசு தயாராகியுள்ளது.

அத்துடன் ஜெனீவா சமரை இலக்கு வைத்தே தேசியமக்கள் சக்தி அரசு வடக்கு அபிவிருத்தியில் தீவிர கவனம் செலுத்துவதாக காண்பிக்கத் தொடங்கியுள்ளது, இதற்காகவே கடந்த 1 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வடக்கிற்கு இரு நாள் விஜயம் செய்து யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தின் 3ஆவது கட்டத்தின் பணிகள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் யாழ். பிரதேச அலுவலகத்திறப்பு, யாழ்ப்பாணம், மண்டதீவு பகுதியில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள நவீன கிரிக்கெட் மைதானத்தின் பணிகள், உலக தென்னை தினத்தை முன்னிட்டு புதுகுடியிருப்பில் "கப்துரு சவிய" தேசிய வேலைத்திட்டம், முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகள் போன்ற அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்துள்ளார்.




இந்த வடக்கு விஜயத்தின்போது செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு இடத்திற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க செல்வார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டபோதும் அங்கு செல்வதை தவிர்த்த அவர் யாழ்ப்பாணத்தில் நின்றவாறு "செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் எவ்வித மாற்றமும் இல்லை. செம்மணியில் தோண்டப்படும் மனித எச்சங்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் இந்த விசாரணைகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது" என ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு உறுதியளித்துள்ளதுடன் சர்ச்சைக்குரிய கச்சதீவுக்கு அதிரடி விஜயம் செய்து வடக்கு மீனவர்களுடன் நாம் இருக்கின்றோம் என்ற செய்தியையும் வெளிப்படுத்தியுள்ளார்.




இது மட்டுமன்றி இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் சமர்ப்பிக்கவுள்ள வாய்மொழிமூல அறிக்கையில் வெளியிடப்படவுள்ள இலங்கை குறித்த விடயங்களின்,குற்றச் சாட்டுக்களின், அழுத்தங்களின், காலக்கெடுக்களின் சூட்டை தணிக்கக் கூடிய, சமாளிக்கக்கூடிய, அதிலிருந்து தப்பிக்கக்கூடிய திட்டமிடல்களை இலங்கை அரசு ஏற்கனவே ஆரம்பித்து விட்டது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் பெரும்பாலும் இடம்பெறுமென கருதும் விடயங்களை தெரிவு செய்து அவற்றுக்கான பதில்களையும் தயார்படுத்தியுள்ளதுடன் இன்னும் சிலவற்றில் கால அவகாசத்தை கோரியும் சில தளர்வுகளை செய்தும் நிவாரணங்களை, உறுதிமொழிகளை வழங்கியும் அந்தக் குற்றச் சாட்டுக்களை நீர்த்துப்போக வைக்கும் முயற்சியில் இலங்கையின் வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதன் முதல் நகர்வாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கையிலுள்ள வெளிநாடுகளின் இராஜதந்திரிகளை சந்தித்துள்ளார். இதன்போது இலங்கையில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி அமைந்த பின்னர் ஏற்பட்டுள்ள மனித உரிமைகள் தொடர்பான முன்னேற்றங்களை அவர்களுக்கு விளக்கியதுடன் பொறுப்புக்கூறல், நீதி மறுசீரமைப்பு மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு உள்நாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளினூடாக இலங்கை அரசாங்கம் கணிசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதையும் ஆட்சியை பொறுப்பேற்று சிறிது காலத்தினுள்ளேயே பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களையும் தெளிவுபடுத்தி அதனை மேலும் தொடர சர்வதேசத்தின் ஒத்துழைப்பு கால அவகாசமும் தமக்கு தேவை என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

அதுமட்டுமன்றி வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இலங்கையின் சிறப்பு இராஜதந்திர குழு 6 ஆம் திகதி சனிக்கிழமை ஜெனிவாவுக்கு விஜயம் செய்யவுள்ளது தொடர்ந்தும் மூன்று நாட்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் கலந்து கொள்ளவுள்ள இக் குழு, உள்ளக விசாரணைகளுக்கான சர்வதேசத்தின் வழிகாட்டல்கள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை கோருவதற்கு திட்டமிட்டுள்ளதுடன், பொறுப்புக்கூறலை முழுமையடைய செய்ய கால அவகாசத்தை கோரவும் தீர்மானித்துள்ளது. அதேபோன்று கடந்த ஒரு வருடகால முன்னேற்றத்தை எடுத்துரைக்கும் வகையில் முழுமையான அறிக்கையையும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளது.

அத்துடன் ஜெனீவா அமர்வில் இலங்கைக்கு சிக்கல் கொடுக்கவுள்ள செம்மணி உள்ளிட்ட மனிதப்புதைகுழிகள் தொடர்பிலும் இலங்கை அரசு பதில்களைத் தயாரித்து விட்டது. இலங்கையில் செம்மணி மட்டுமன்றி, கொக்குத்தொடுவாய், மண்டைதீவு, மன்னார், கொழும்பு துறைமுகம் என பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் உள்ளநிலையில் இந்த புதைகுழிகளின் உரிமையாளர்கள் ரணில் மற்றும் ராஜபக்சக்களே தவிர நாம் அல்ல. இந்த மனிதப்புதைகுழிகள் தொடர்பிலான, விசாரணைகள் போன்றவற்றுக்கு நாம் போதியளவு நிதியை ஒதுக்கி வசதிகளை செய்து கொடுத்துள்ளோம். இதனுடன் தொடர்புபட்ட சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்த கால அவகாசம் தேவையென்றே இலங்கை அரசு கோரவுள்ளது.

இந்த புதைகுழிகள், காணலாலாக்கப் பட்டோருடன் தொடர்புடைய சிலர் வடக்கிலும் உள்ளனர். செம்மணி மனிதப் புதைகுழியுடன் தொடர்புடையவர்கள் வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கும் தெரிவாகியுள்ளனர். காணாமலாக்கப் பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் மீள நடவடிக்கைளை ஆரம்பித்துள்ளது. எனவே அரசாங்கம் என்ற ரீதியில் இந்த விசாரணைகளை சுயாதீனமாக முன்னெடுக்க விரும்புகிறது. எனவே சுயாதீனமான நீதிமன்ற கட்டமைப்பு நாட்டில் காணப்படும் போது, சர்வதேச விசாரணைகள் தேவையில்லை. உள்ளக விசாரணைகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளுக்கு அனுமதியளிக்கத் தயாராகவே உள்ளோம். குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் வழிகாட்டல்கள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் தேவை என்றவாறாகவே இலங்கை அரசு பதிலளிக்கப் போகின்றது.

இவ்வாறாக நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வில் தமிழர் தரப்புகளுக்கான "பிளஸ் பொயிண்ட்" களாக பாரிய செம்மணி மனிதப்புதைகுழி, அது தொடர்பாக கைதாகி மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவின் செம்மணி படுகொலைகள், மனிதப் புதைகுழிகளுடன் தொடர்புபட்ட இராணுவ அதிகாரிகள் தொடர்பில் ஐ.நா.வில் சாட்சியமைக்கத் தயார் என்ற அறிவிப்பு மற்றும் ஏனைய மனிதப்புதைகுழிகள், அரசியல் கைதிகள், வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்டோர் விடயங்கள் உள்ள நிலையில் இலங்கை அரசுக்கான "பிளஸ் பொயிண்ட்"களாக நடந்து முடிந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கான தமிழ் மக்களின் பேராதரவு, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம். புதிய அரசியலமைப்பு உருவாக்கம், அடுத்த வருடம் வடக்கு, கிழக்கில் மாகாண சபை தேர்தல். முன்னாள் ஜனாதிபதி ரணிலின் கைது மூலம் நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாடு உறுதிப்படுத்தல், தமிழ் மக்களின் உயிர் நீத்தோருக்கான நினைவுகூரல்களுக்கான அனுமதிகள் என்ற விடயங்கள் அமையவுள்ளன.

***(தொடர்ச்சி 17 பக்கம்)***

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி | Ontario Works |
| விலங்கு சேவைகள் | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | பூங்காக்கள் |
| கட்டட அனுமதி பத்திரங்கள் | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | பொதுச் சுகாதாரம் |
| அவசர வீட்டு வசதிகள் | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | ஆதன வரிகள் |
| கழிவுப் பொருட்கள் சேவை | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | மீள் சுலட்சியும் பசுமை திட்டமும் |
| மாநகரத் தேர்தல் | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | நீர் விநியோகம் |

| நியமன அலுவலகம் | ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம் |
|---|---|
| Scarborough Civic Centre<br>150 Borough Drive, 2nd Floor<br>Scarborough, ON M1P 4N7<br>Phone: 416-396-7222<br>Fax: 416-392-4006 | 100 Queen Street West,<br>2nd Floor - Suite C52<br>Toronto, ON M5H 2N2<br>Phone: 416-392-4008<br>Fax: 416-392-4006 |

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

# ஐ.நாவின் 60தாவது கூட்டத் தொடர் தமிழர் தரப்பு கோருவதை பெற்றுத் தருமா?

- ந.லோகதயாளன் -

ஒக்டோபர் 6 முதல் 8 வரை ஐ.நா மனிதஉரிமைப் பேரவையில் கொண்டு வரப்படவுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையில் தமிழர் தரப்பின் வகி பாகம் என்ன என்ற கேள்வி முன் வைக்கப்படுகின்றது.

ஐ.நா மனிதஉரிமைப் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் நாளை செப்ரெப்பர் 8 ஆம் திகதி ஆரம்பித்து ஒக்டோபர் 8 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இதிலே இம் முறையும் இலங்கை தொடர்பான விடயம் வாக்கெடுப்பிற்கு வரவுள்ளது. அதற்கான பிரேரணையை இலங்கை தொடர்பான தீர்மானங்களை கொண்டு வரும் பிரித்தானியா தலைமையிலான கோ குறூப் எனப்படும் அணி தயார் செய்து வருகின்றது.

இதற்கு ஆதரவு சேர்க்கும் வகையில் இலங்கையில் இருந்து அரசியல் கட்சிகள் ஐ.நா.மனித உரிமை ஆணையாளருக்கு கடிதம் எழுதினோம், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் வைத்து கையெழுத்து திரட்டினோம் என அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் செயல்பட்டாலும் அங்கே ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் அல்லது கோ குறூப் என்பன தனித்து முடிவெடுக்க முடியுமா என்ற விடயத்தை தெளிவுபடுத்த மறந்து விட்டனர்.

அதாவது ஆணையாளரின் பணி ஒரு நாட்டை அல்லது விடயத்தை திரட்டி தனது பரிந்துரையை வழங்க மட்டுமே முடியும் அவர் ஓர் நடு நிலையாளர் என்பதனால் ஒரு நாட்டிற்கு ஆதரவாகவோ எதிராகவோ தீர்மானத்தை கொண்டு வர முடியாது. இதனைக்கூட தெரியாத பலர் இன்றும் ஆணையாளருக்கு கடிதம் அல்லது கோரிக்கை அனுப்புகின்றனர்.

இங்கே ஐ.நா ஒன்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை அல்ல. யாழ்பாணம. மாநகர சபையிலேயே 45 உறுப்பினர்கள் என்றால் குறைந்தபட்சம் 23 உறுப்பினரகள் ஆதரிக்க வேண்டும் என்பதை வெளிப்படையாக கூற வேண்டும். அதே போன்று ஐ.நா அமைப்பிலே ஆண்டு தோறும் 47 நாடுகள் வாக்குரிமை கொண்டிருக்கும் என்பது வெளிப்படையான விடயம் இந்த 47 நாடுகளில் 24 நாடுகள் ஆதரவாக வாக்ளித்தால் மட்டுமே ஓர் பிரேரணை வெற்றியடைய முடியும்.

அவ்வாறானால் அந்த 47 நாடுகளில் இருந்து ஆதரவைப் பெறுவதற்கு இந்த அரசியல் கட்சிகள் முயல வேண்டும். இதனை எத்தனை கட்சிகள் மேற்கொண்டனர் எனத் தேடினால் அதற்கான விடையை கண்டு பிடிப்பது கடினமாகவே இருக்கும். ஏனெனில் பல கட்சிகளிற்கு இம்முறை வாக்களிக்கத் தகுதியான நாடுகளின் பட்டியலில் உள்ள நாட்டில் எவரையுமே தெரியாது என்பதோடு இவற்றில் அதிக நாடுகளிற்கு இலங்கையிலும் தூதரகம் கிடையாது.



இருக்கும் ஒரு மாத கால இடைவெளியில் இனி எந்தவொரு அரசயல் கட்சியும் இப் பணியை நிறைவேற்றி முடிக்கவும் முடியாது மாறாக தூதரகங்களிற்கு வெறுமனே கடிதம் அனுப்பினால் வாக்களிக்க அவர்கள் ஒன்றும் மாமன் மச்சானும் கிடையாது.

இவ்வாறான சூழலில் தமிழ்க் கட்சிகள் எடுக்கும் முன் நகர்வுகள் தமிழ்த் தரப்புக்களை வேண்டுமானால் ஈர்க்க முடியுமே அன்றி வாக்களிக்கத் தகுதியான 47 நாடுகளை ஈர்க்க மாட்டாது.

வாக்களிக்கும் உரிமைகொண்ட ஆசியவில் உள்ள இலங்கை அரசிற்கு சார்பான முடிவை எடுக்கும் நாடுகள் எதிர்பார்க்கும் பங்களதேஸ், யப்பான், இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளைக்கூட சந்தித்ததாக எந்தச் செய்திகளும் கிடையாது.

இதேநேரம் ஐ.நாவின் 60 ஆவது கூட்டத்தொடரில் மேற்குலகம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வந்து அது இலங்கை அரசிற்கு கடும் அழுத்தமாக அல்லது பெரும் தாக்கமாக இருக்கும் என எதிர்பார்த்தால் அந்த முடிவும் தவறானது என ஐ.நாவை தொடர்ந்து கண்காணிக்கும் தரப்புக்கள் உறுதி செய்கின்றனர் அதற்கு ஆதாரமாக மேற்குலக நாடுகளின் பட்டியலில் 13 நாடுகள் மட்டுமே உள்ளதான அதிர்ச்சித் தகவலும் உள்ளது. மிகுதி நாடுகள் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் என்பதோடு அதிக நாடுகள் மேற்குலக நாடுகளிற்கு எதிரான நாடுகள் என்பதை பலர் அறியவில்லை.

இதன் காரணமாக தொடர்ச்சியாக நிகழ்ச்சி நிரலில் தக்க வைக்கும் நோக்கில் இலங்கை அரசிற்கு மேலும் இரண்டு ஆண்டு காலம் கால நீடிப்பையே இந்தப் பிரேரணையும் வழங்கப் போகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெருந்தன்மையுடன் நிதியாதாரம் அளிப்பவர்கள் CN alectra

செப்டம்பர் மாதம்
பிராம்ப்டன் நகர
மரங்களுக்கான மாதம் ஆகும்

கீழ்கண்டவாறு கொண்டாட எங்களுடன் இணையுங்கள்:
- மரம் நடும் முனைப்புக்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி அறிதல்
- கால அட்டவணையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளில் பங்கெடுத்தல்
- குடியிருப்பகங்களில் நடுவதற்கான இலவச மரக்கன்றுகள் பெறுவதில் பங்கெடுத்தல்

brampton.ca/trees
@BramptonParksRec
BRAMPTON

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8


# ""உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்" தாயகத்திற்கு அப்பால் தமிழர் மரபை பேணும் பணிகளை தொடர்வதைக் காண்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்"

## மேற்படி இயக்கத்தின் கனடாக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற "உங்களோடு இசைக்கவி ரமணன்" விழாவில் சிறப்புரையாற்றிய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம்













1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பெற்ற ""உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்" தாயகத்திற்கு அப்பால் தமிழர் மரபையும் பண்பாட்டையும் பேணும் பணிகளை தொடர்வதைக் காண்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணத்தில்ழ அந்தக் காலப்பகுதியில் நடைபெற்ற தமிழாராச்சிய மாநாட்டினை குழப்பும் நோக்குடன் தாக்குதல்களில் ஈடுபட்ட பொலிஸாரின் செயலால் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் இழப்பின் கொடுமையை உலகிற்கு எடுத்துச் செலலும் பாரிய பொறுப்புடன் ஆரம்பிக்கப்பெற்ற இந்த அமைப்பு தற்போது உலகின் பல நாடுகளில் கிளைகளை நிறுவி அரிய சேவைகளை ஆற்றிவருவதை நான் நேரயாகவே காண்கின்றேன். எனவே இந்த முயற்சியில் ஈடுபட்டு அயராது உழைக்கின்ற அனைத்து இயக்குனர் சபை உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இன்றைய நாளின் சிறப்புப் பேச்சாளர் இசைக்கவி ரமணன் அவர்களுக்கும் கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகம் வழங்கிய கவியரங்கம் சிறப்பாகவும் உற்சாகமாகவும் நடைபெற பங்களித்த அனைத்து கவிஞர் பெருமக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்".

இவ்வாறு, மேற்படி உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கடந்த 30ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் அமைந்துள்ள பைரவி நுண்கலைக் கூடத்தின் கலையகத்தில் நடைபெற்ற "உங்களோடு இசைக்கவி ரமணன்" விழாவில் சிறப்புரையாற்றிய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம் சூட்டினார்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையின் தலைவரும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கவியரங்கம் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த இசைக்கவி ரமணன் அவர்கள் வழங்கிய "கவிஞர் கண்ணதாசனும் நாமும்" என்னும் பல்சுவை கலந்த இலக்கிய உரையின் போது இசைக்கவி அவர்கள் கண்ணதாசன் அவர்களது திரையிசைப் பாடல்களை இனிமையாகப் பாடிப் பாடி தனது உரையை வழங்கினார் என்பதும் அங்கு சபையில் அமர்ந்திருந்த அனைவரும் அதனை ஆர்வத்துடன் கேட்டு மகிழ்ந்து இறுதியில் அவரோடு இணைந்து புகைப்படமும் எடுத்துச் சென்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அற்புத நர்த்தனாலயம் — பரதக்கலை பயிற்சி நிறுவன மாணவி சஞ்சனா பரதன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்புற நடைபெற்றது



ஸ்ரீமதி அற்புதராணி கிருபைராஜ் அவர்களின் அற்புத நர்த்தனாலயம் - பரதக்கலை பயிற்சி நிறுவன மாணவி சஞ்சனா பரதன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 31ம் திகதி மாலை றிச்மண்ட்ஹில் நகரில் அமைந்துள்ள RICHMOND HILL CENTRE FOR PERFORMING ARTS கலா மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

சஞ்சனா பரதன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்தின் பிரதான நட்டுவாங்கத்தை அவரது குரு ஸ்ரீமதி அற்புதராணி கிருபைராஜ் அவர்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் கையேற்று சிறப்புடன் அரங்கேற்றத்தை நடத்திச் சென்றார்.

பக்கவாத்தியக் கலைஞர்களாக பாட்டு: அருண் கோபிநாத் அவர்கள், மிருதங்கம்: கௌரிசங்கர் அவர்கள், வயலின்: ரி.என். பாலமுரளி அவர்கள், புல்லாங்குழல்: சுருதி பாலமுரளி அவர்கள் ஆகியோர் நேர்த்தியாக தமது பங்களிப்புக்களை வழங்கி அரங்கேற்றத்தை இறுதிவரையிலும் கண்ணும் கருத்துடன் நகர்த்திச் சென்றனர்.

ஆரம்ப உருப்படியாகத் மேடையில் தோன்றிதனது "கணேச அர்ப்பண" த்தை வழங்கிய மாணவி சஞ்சனா பரதன் அவர்களின் ஆற்றல் "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்ற கூற்றுக்கு இணங்க இறுதிவரை அதே அர்ப்பணிப்பு





- கவனிப்பு - உற்சாகம் ஆகியவற்றோடு இறுதி வரை சென்று தித்திப்பாகக் அளித்த "தில்லானா" வுடன் நிறைவுற்றது.






பார்வையாளர் திரளாக வந்து இறுதிவரை மண்டபத்தில் நிறைந்திருந்து நிறைவுடன் இல்லம் ஏகினர்.

இவ்வாறான அரங்கேற்றங்கள் ஒரு சிலவே இந்த மண்ணில் தமிழர் கலையும் பண்பாடும் நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கும் என்பதற்கு சாட்சியமாக விளங்குகின்றன என்றால் அது மிகையாகாது.

**படங்களும் தகவலும்: சத்தியன்**

கனடிய செய்திகள் Canadian News

# Goldenbell Productions ஏற்பாட்டில் ஸ்காபுறோவில் சிறப்பாக நடைபெற்ற GALA DANCE-2025ல் கலந்து சிறப்பித்த பிரபல நடனக் கலைஞர் SANDY MASTER

## விஜயா யுவல்லறி நிறுவனம் நடத்திய அதிஸ்டக் குலுக்கலில் வெற்றிபெற்ற இருவருக்கு பரிசாக வழங்கிய இரண்டு தங்கச் சங்கிலிகள்



கடந்த 31-08-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள சீனக் கலாச்சார மண்டபத்தில் GOLDENBELL PRODUCTIONS ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்ற GALA DANCE-2025ல் கலந்து சிறப்பித்த பிரபல நடனக் கலைஞர் SANDY MASTER கனடாவில் இயங்கிவரும் திரைஇசை மற்றும் மேல்நாட்டு நடனங்களை கற்றுத் தரும் நடனப் பாடசாலைகளையும் இங்கு அதனைப் பயின்று வரும் மாணவ மாணவிகளையும் மற்றும் பெற்றோரையும் பாராட்டினார். அத்துடன் இத்தனை சிறப்பாக அன்றை நடனப் போட்டி நிகழ்ச்சிகளையும் நடத்திய GOLDENBELL PRODUCTIONS நிறுவனத்தையும் மற்றும் நடன ஆசிரியையும் நடனக் கலைஞருமான சிந்தியா அவர்களையும் பாராட்டினார்.





















அன்று காலை 10.00 மணி தொடக்கம் நடைபெற்ற நடனப் போட்டிகளில் நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தார்கள் என்பது முக்கியமானது.

இந்த போட்டி நிகழ்ச்சியில் முக்கிய விடயம் எதுவெனில். கனடாவில் இயங்கிவரும் பல நடனம் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் இந்த போட்டிகளுக்கு தங்கள் மாணவ மாணவிகளை ஏற்பாடு செய்து ஒத்துழைத்தமையே என்றால் அது மிகையாகாது.

அன்றைய நடனப் போட்டிகளில் ஸ்காபுறோவில் இயங்கிவரும் கே2பி நடனக் கல்லூரி சிரேஸ்ட பிரிவில் முதலிடத்தைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அன்றைய தினம் விஜயா யுவல்லறி நிறுவனம் நடத்திய அதிஸ்டக் குலுக்கலில் வெற்றிபெற்ற இருவருக்கு பர-ிசாக வழங்கிய இரண்டு தங்கச் சங்கிலிகளை விஜய யுவல்லறி நிறுவன அதிபர் ரூபன் அவர்கள் வெற்றியாளர்களுக்கு வழங்கினார். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக தயாரிக்கப்பெற்ற பாராட்டுப் பத்திரங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்கள் வழங்கினார்கள்.

**செய்தியும் படங்களும்: சத்தியன்**

# "கனடிய மகளிர் கழகம்" பிரதி வியாழன் தோறும் இரவு நடத்தும் மருத்துவர் போல் ஜோசேப் அவர்களின் மருத்துவக் கருத்தரங்கு 100 வாரங்களை எட்டியது











கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் "கனடிய மகளிர் கழகம்" (Canadian Women Council) சார்பாக ஒவ்வொரு வியாழன் தோறும் இரவு 9 மணி முதல் 10 மணி வரை கடந்த சில வருடங்களாக மருத்துவர் போல் ஜோசேப் அவர்களினால் நடத்தப்பட்ட நடத்தப்பட்டு வருகிற மருத்துவ கருத்தரங்கு 100 வாரங்களை வெற்றிகரமாக நிறைவு செய்ததை முன்னிட்டு கடந்த வியாழன் அன்று மருத்துவர் போல் ஜோசேப் அவர்களுடைய கிளினிக்கில் நூறாவது வார நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது.பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் தலைமையில், சமூகச் செயற்பாட்டாளர் திரு.குயின்ரஸ் துரைசிங்கம் அவர்கள் முன்னிலைவகித்தார். எழுத்தாளர் கவிஞர் திரு. அகணி சுரேஷ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வுகளை சிறப்பித்தனர். கனடிய மகளிர் கழகத்தின் தலைவி றோகிணி கருப்பையா அவர்களும் அங்கு உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போல் ஜோசேப் அவர்கள் யுத்தங்களாலும், இயற்கை அழிவுகளாலும் சில 100 பேர் அல்லது சில ஆயிரம் பேர் ஆண்டுதோறும் இறப்பதை பெரிதுபடுத்தும் நம் சமூகம் அல்லது அதைப் பற்றியே சில நாட்கள் ஊடகங்களில் உரையாடிக் கொண்டிருப்போர், புற்று நோய் என்ற தொற்றாத நோயாக உலகம் முழுமைக்கும் பரவிக்கொண்டிருக்கும் இந்த நோய், ஆண்டுதோறும் 20 மில்லியன் பேரை தாக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமாராக 10 மில்லியன் பேரை அமைதியாக பலி கொண்டு கல்லறைக்குள்ளே சமாதியாக்கும் இந்த நோயைப் பற்றி பெரிதாக மருத்துவ உலகம் கண்டு கொள்வதில்லை என்றும் இந்த நோய் எப்படி,எதனால், யாருக்கு, வருகிறது இதன் பாதிப்புகள் என்ன, நோய் அறிகுறிகள் என்ன, வருமுன் எப்படி கண்டுபிடிக்கலாம், எப்படி புற்றுநோயை தடுக்கலாம் போன்ற பல விடயங்களை பட விளக்கங்கள் ஊடாக எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கனேடியன் வுமன் கவுன்சில் பொறுப்பாளர் திருமதி. ரோகினி அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

மேற்படி கௌரவிப்பு நிகழ்வில் பயனுள்ள மருத்துவக் கருத்துக்களை பகிர்ந்த கொண்ட மருத்துவர் போல் ஜோசப் அவர்களை பலரும் பாராட்டிச் சென்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News
மன்னார் நிருபர்

# மன்னாரிலிருந்து இரண்டு கால்பந்தாட்ட வீரர்கள் இலங்கை தேசிய அணிக்கு தெரிவாகியுள்ளனர்







- எஸ்.ஆர்.லெம்பேட் (02-09-2025)

இலங்கை 16 வயது கீழ் உதைபந்தாட்ட தேசிய அணியில் மாணவர்களை உள்வாங்குவதற்கு நடைபெற்ற தேர்வில் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையை சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவாகி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான செல்வன் ரே.கெஸ்ரோன், செல்வன் மு.ஜெனிஸ்ரன் ஆகியோர் குறித்த தெரிவில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி திறமையை வெளிப்படுத்தியதன் அடிப்படையில் தேசிய அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரு மாணவர்களும் கலந்து கொள்ளும் முதலாவது சர்வதேச உதைபந்தாட்ட போட்டியானது சீனாவில் இம் மாதம் 20ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப் போட்டி "U16 Tainyu Liufang Cup – 2025" ற்கான போட்டியாகும். இதற்கான மேலதிக பயிற்சிகள் இம் மாதம் 4ம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம்மாணவர்கள் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் இருந்து தமது கல்வியை மேற்கொள்கின்றார்கள் என்பதன் அடிப்படையில் குறித்த மாணவர்களுக்கு உதவி செய்ய விரும்புவோர் அதிபர் ஊடாக உங்கள் உதவிகளை வழங்கி அந்த மாணவர்களின் திறமைக்கான அங்கீகாரம் பெறுவதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.




இம் மாணவர்களது மேலதிக பயிற்சிக்கான செலவையும், அவர்கள் சீனாவில் இருக்கும் போது ஏற்பட உள்ள மேலதிக செலவையும் தாங்கிக் கொள்வதற்கான பண வசதி இல்லாத சூழ்நிலையில் தற்போது இருக்கிறார்கள்.

எனவே இம் மாணவர்களை ஊக்கப்படுத்தி தேசிய மட்ட அணியில் ஒருவராக விளையாடுவதற்கு தங்களால் இயன்ற நிதி உதவியை வழங்கி உதவுமாறு பாடசாலை சமூகம் சார்பாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மன்னார் நறுவிலிக்குளம் பகுதியில் பல கோடி ரூபாய் பெறுமதியான 906 கிலோ கேரள கஞ்சாப் பொதிகள் மீட்பு



- எஸ்.ஆர்.லெம்பேட் (03-09-2025)

முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நறுவிலிக்குளம் கடற்கரை பகுதியில் இருந்து பல கோடி ரூபாய் பெறுமதியான ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகள் 3ம் திகதி அன்றைய தினம் புதன்கிழமை காலை மீட்கப்பட்டு முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மன்னார் பொலிஸ் விசேட பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முருங்கன் பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் இணைந்து மன்னார்-நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் கடற்கரை பகுதியில் 3ம் திகதி அன்று திங்கட்கிழமை காலை விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது 25 மூட்டைகளில் பொதி செய்யப்பட்ட 398 சிறிய பொதிகளைக் கொண்ட கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா 906 கிலோ கிராம் எடை கொண்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகளின் இலங்கை பெறுமதி பல கோடி என தெரிய வருகிறது.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மன்னார் வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜய சேகர முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கு 3ம் திகதி அன்று புதன்கிழமை காலை விஜயம் செய்து மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளை பார்வையிட்டதோடு, பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் கலந்துரையாடியுள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சாதித்து காட்டிய மன்னார்.:.கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயம்



- எஸ்.ஆர்.லெம்பேட் (04-09-2025)

அண்மையில் இடம் பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பெறுபேறுகள் வெளிவந்துள்ள நிலையில் மாவட்ட ரீதியில் மன்/கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலய மாணவன் ச.லெசோடரன் அதிகூடிய புள்ளிகளை பெற்று மாவட்டத்தில் முதலாவது நிலையை பெற்றுள்ளார்.

குறிப்பாக இம் முறை மன்/றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தின் 18 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் அவர்களில் 8 மாணவர்கள் வெட்டு புள்ளிக்கு அதிகமான மதிப்பெண்கள் பெற்று சித்தியடைந்துள்ளதுடன் 100 வீத சித்தியையும் பெற்றுள்ளனர்.

மன்/கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலய மாணவன் ச.லெசோடரன் 174 புள்ளிகளை பெற்று மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

# தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மன்னார் அல் – அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலை மாணவர்கள் கௌரவிக்கப்பெற்றனர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (04-09-2025)

அண்மையில் நடை பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மன்னார் அல்-அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலை மாணவர்கள் 05 பேர் 4ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை மாலை கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் திருமதி. எஸ்.எப்.பஸ்மி தலைமையில் 4ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை மாலை பாடசாலை மைதானத்தில் ஆரம்ப பிரிவு மாணவர்களின் விளையாட்டுப் போட்டி மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து பரிசு வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

றிப்கி றிஸாமா-153 புள்ளிகளையும், ஹிஜாஸ் ஹிபா 137 புள்ளிகளையும், லுக்மான் அஹமட் 136 புள்ளிகளையும், அர்ஷத் கான் ஹயாலீனா-133 புள்ளிகளையும் அபான் ஆசிப் அஹமட்-131 புள்ளிகளையும் பெற்று சித்தி அடைந்த நிலையில் குறித்த 5 மாணவர்களும் கௌரவிக்கப்பட்ட மை குறிப்பிடத்தக்கது.





# மன்னாரில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்தை சுற்றி வளைத்த சுகாதார அதிகாரிகள்



- எஸ்.ஆர்.லெம்பேட் (04-09-2025)

மன்னார் நகர பகுதியில் நீண்ட நாட்களாக உரிய அனுமதியின்றி சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்று 3ம் திகதி அன்று புதன்கிழமை மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை சுகாதார உத்தியோகத்தர் களினால் சுற்றி வளைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் - பள்ளிமுனை பிரதான வீதியில் அமைந்திருந்த குறித்த உணவகம் உரிய முறையில் பதிவு செய்யப்படாமல் அசுத்தமாக உணவுகள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரியின் ஒத்துழைப்புடன் பொது சுகாதாரஉத்தியோகத்தர் களினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அகப்பட்டது.



குறித்த உணவகத்தின் கழிவுநீர் வெளியேற்றப் படாமல் புழுக்கள் இளையான் உருவாகியும் அதே நேரம் ஆரோக்கியமற்ற விதமாக உணவுகள் தயாரிக்கப் பட்டிருந்தமை, கையுறை தலையுறை பயன்படுத்தாமல், அத்துடன் உணவுப்பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சிய படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அடிப்படையில் குறித்த உணவகத்திற்கு சீல் வைக்கப்பட்டது.

குறித்த உணவகத்தின் உரிமையாளர் மீது பல்வேறு பிரிவுகளில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முக்கனியில் மாங்கனி (கலி வெண்பா)

-------------------------



கந்தையா வாத்திக் கறுத்தக் கொழும்பனோ
சந்தைக்குப் போனதாய்ச் சாட்சி இருக்குதா?
செல்லையா வீட்டிலே செம்பாட்டு மாம்பழம்
சொல்லில் அடங்காச் சுவையைத் தருமே!
விமலா வளர்த்த விலாட்டுக் கனிகள்
கமலா கணவனின் காவலில் தொங்கும்
அருமை மகளது அம்பலவிக் காயின்
பெருமை அறிந்தே பெறுவோர் பலரும்
முருகதாஸ் அண்ணையின் முற்றிய பாண்டி
வருவோர் பலருமே வாங்கிச் சுவைத்தனர்.
செல்லன் தருகிற சேலம் பழத்தையே!
சொல்லி மகிழ்ந்தே சுவைபடத் தின்றோம்
கொழும்பு வணிகரின் கொல்லைக் கிளிமா
பழுத்துக் குலுங்குதே பார்க்க அழகுடன்.
பீட்டுடன் மாங்கனி பின்னி அருந்தினால்
கட்டுடல் தந்தே களைப்பை அகற்றிடும்.
முக்கனி என்பதில் முக்கியம் மாங்கனி
இக்கனி என்றே இயம்பு.

-------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

(11 பக்கத் தொடர்ச்சி)

# ஜெனீவா இராஜதந்திர போரில் ஜெயிக்கப் போவது யார்...?

ஜெனீவா சமருக்கு தமிழர் தரப்பும் இலங்கை அரசும் இவ்வாறாக தயாராகியுள்ள நிலையில், சர்வதேச காணாமலே போனோர் தினத்தை முன்னிட்டு இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-அண்ட்ரே ஃபிராஞ்ச் வெளியிட்ட அறிக்கையில், இலங்கையில், அண்மையில் மனித புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சிறுவர்கள் உள்ளிட்ட பலரின் மனித என்புக்கூடுகள் மற்றும் தனிப்பட்ட உடைமைகள் என்பன, கடந்த கால மனித உரிமை மீறல்களின் அளவையும், நம்பகமான, வெளிப்படையான மற்றும் சுயாதீன விசாரணைகளுக்கான அவசரத் தேவையையும் வலியுறுத்துகின்றது. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் இந்த மீறலை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளவோ, மன்னிக்கவோ அல்லது மறக்கவோ கூடாது. பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் கண்காணிப்பு, அச்சுறுத்தல்கள், மிரட்டல் மற்றும் பழிவாங்கல்கள் குறித்தும் ஐ.நா. சபை கவலை கொண்டுள்ளது.

அதேவேளை வலுக்கட்டாயமாக காணாமல் போவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டை அங்கீகரிப்பது மற்றும் காணாமல் போனவர்கள் மீதான அலுவலகம் (OMP) மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றை நிறுவுவது உட்பட இந்த வேதனையான மரபை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்கள் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீண்டும் நிகழாததற்கான உத்தரவாதங்களுக்கான உரிமைகளை உணர முடியும் என்பதை உறுதி செய்வதற்காக, வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்த நம்பகமான, சுயாதீனமான விசாரணைகளை ஆதரிப்பதில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து உறுதியாக இருக்கின்றது எனக் கூறியுள்ளார்.

எனவே நடைபெறவுள்ள தமிழர் தரப்பு-இலங்கை அரசுக்கிடையிலான ஜெனீவா இராஜதந்திரப் போரில் இலங்கை அரசுக்கு சாதகமான முடிவுகள் கிடைக்கவே அதிக வாய்ப்புண்டு. இலங்கையில் தற்போது ஆட்சியிலுள்ள தேசிய மக்கள் சக்தி அரசு மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் பேராதரவு வழங்கியுள்ளனர்.தற்போதைய அரசு பதவியேற்று ஒருவருடம் கூட நிறைவடையவில்லை. எனவே புதிய அரசுக்கு குறிப்பிட்ட காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும், இலங்கையில் நீதித்துறை சுதந்திரமாக செயற்படுகின்றமைக்கான சான்றுகள் உள்ளன. பயங்கரவாத சட்டம் நீக்கப்படுகின்றமை நம்பிக்கையைத் தருகின்றது. ஆகவே மனிதப் புதைகுழிகள், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படும் என நம்புகின்றோம், தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில் அரசின் பொறுப்புக்கூறல், நல்லிணக்க செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றவாறாக அரசுக்கு சாதகமான வகையிலும் தமிழ் மக்களுக்கும் தமிழ் தரப்புகளுக்கும் சில ஆறுதல்களையும் உறுதிமொழிகளையும் மட்டும் வழங்கும் வகையிலுமே ஐ.நா. தீர்மானம் அமையும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# செம்மணி வழக்குகளை நடத்திய நீதிபதி பதவி உயர்வு பெற்ற விடயம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை



இலங்கையின் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியாகக் கருதப்படும் இடத்தை அழ்வாய்வு செய்யும் பணிகளை ஆரம்பத்தில் இருந்தே மேற்பார்வையிட்டவரும், குறித்த இடத்தை குற்றச் சம்பவம் இடம்பெற்ற பகுதியாக அறிவிக்க நடவடிக்கை எடுத்தவருமான நீதிவான் மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி விசாரணைகள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் இரண்டு நாட்கள் தகவல்களை சேகரித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தனது முதல் அறிக்கையை வெளியிட்டு, நீதி அமைச்சர், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, உயர்கல்வி அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோருக்கு தனித்தனியாக பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

செப்டெம்பர் 03, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க 18 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கினார், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட கோட்டை நீதிபதி நிலுபுலி லங்காபுர மற்றும் யாழ்ப்பாண நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா ஆகியோரின் பெயர்களும் இதில் உள்ளடங்கும்.

தற்போது செம்மணி அகழ்வாய்வை விசாரிக்கும் தற்போதைய கற்றறிந்த நீதவான் பதவி உயர்வு பெற்றால், தற்போதைய விசாரணை தொடர்பாக அவருக்குப் பின்னர் விசாரணைகளை முன்னெடுக்கும் நீதவானுக்கு தேவையான அனைத்து உதவிகளும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென, ஜனாதிபதி இந்த நியமனங்களை வழங்குவதற்கு முன்னதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட செம்மணிப் புதைகுழி குறித்த தனது முதல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் செல்வநாயகம் லெனின்குமாரின் மேற்பார்வையில் அகழ்வாய்வுகள் இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.



3. Take immediate steps to provide resources for the use of GPR equipment from the University of Sri Jayewardenepura to scan a wider area in the mass grave site as well as the surrounding area to comprehensively assess whether further human remains exist in the area.

4. Take steps to prioritise the completion of the investigation in Chemmani when securing and allocating key human resources such as archaeological research teams. Develop a pool of available archaeological experts to support excavations and exhumations at multiple mass grave sites.

5. Seek and secure relevant expertise and technological facilities, including from overseas, for the purpose of credibly and independently analysing DNA samples gathered from the human remains found at the mass grave site in Chemmani.

6. Take steps to establish a 'DNA bank' in which DNA samples of family members of disappeared persons can be voluntarily obtained and securely stored for future comparison purposes.

7. Seek and secure relevant expertise and technological facilities from overseas for the purpose of credibly and independently dating the human remains found at the mass grave site in Chemmani, and specifically securing the use of the bomb-pulse ¹⁴C carbon dating method.

8. Take steps to implement the above-mentioned recommendations with respect to all other investigations into mass grave sites in Sri Lanka.

9. Ensure that all necessary support with respect to the present investigation into the mass grave site in Chemmani is provided to the successor of the present Learned Magistrate in the event of his promotion.

10. Take steps to establish a permanent independent 'Office for the Investigation and Prosecution of Serious Crimes by State Officials' with broad powers to investigate inter alia enforced disappearance and extra-judicial killings allegedly committed by members of security forces or law enforcement authorities, and to prosecute perpetrators.

To the Inspector General of Police:

11. Issue directions to the CID to refrain from intimidating any state functionaries or family members of disappeared persons, including pursuing irrelevant and antagonistic lines of questioning during the course of any ongoing investigation.

12. Issue directions to the CTID to:
a. Strictly conform to the IGP's Circular RTM 101/CRTM 61 dated 2 July 2025 when conducting investigations (i.e., to clearly inform a person of the reason for which they are summoned to give a statement); and

இரண்டாம் கட்ட அகழ்வாய்வில் 3ம் திகதி புதன்கிழமை வரையில் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனித புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மொத்த எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 231 ஆக உயர்வடைந்துள்ளது.

முன்னாள் நீதவானால் குற்றம் நடந்த இடமாக அறிவிக்கப்பட்டுள்ள புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள், நீதிக்குப் புறம்பான கொலைகளுக்கு உள்ளானவர்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பொது அதிகாரிகள் மற்றும் பாதிக்கப் பட்டவர்களை துன்புறுத்துவதைத் தவிர்க்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவிக்கு உத்தரவிடுமாறு செப்டெம்பர் 03 வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் மாஅதிபருக்கு பரிந்துரைத்துள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி விசாரணையில் இலங்கை பொலிஸாரும், இலங்கை இராணுவமும் "இணைந்த தரப்பினராக" அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 13 பக்க அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளில், எந்தவொரு அரச அதிகாரி, சிவில் சமூகப் பிரதிநிதி அல்லது காணாமல் போனவரின் குடும்ப உறுப்பினரைத் தொடர்பு கொள்வது உட்பட, எந்த வகையிலும் தலையிடுவதைத் தவிர்க்குமாறு இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு தெளிவான அறிவுறுத்தல்களை வழங்குமாறு இலங்கை பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இலங்கை இராணுவத் தளபதி ஆகியோருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

விசாரணைகளை நடத்தும்போது (அதாவது, ஒரு நபர் வாக்குமூலம் அளிக்க ஏன் அழைக்கப்படுகிறார் என்பதை தெளிவாகத் தெரிவிப்பதற்காக) ஜூலை 2, 2025 திகதியிடப்பட்ட பொலிஸ்மா அதிபரின் RTM 101/CRTM 61 இலக்க சுற்றறிக்கைக்கு அமைய செயல்படுமாறும், குறித்த தவறுகள் தொடர்பிலான தெளிவான சந்தேகம் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர, செம்மணி புதைகுழி விசாரணை குறித்து செய்தி வெளியிடும் ஊடவியலாளர்களை அழைத்து புலனாய்வு அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதைத் தவிர்க்குமாறு பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரைணைப் பிரிவுக்கு (CTID) அறிவுறுத்தல்களை வழங்குமாறும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீண்டும் ஒருமுறை பொலிஸ் தலைவருக்கு நினைவூட்டியுள்ளது.

பாதுகாப்புப் படையினர் அல்லது சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மீது சுமத்தப்படும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் சட்டவிரோதக் கொலைகள் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரித்து வழக்குத் தொடர பரந்த அதிகாரங்களைக் கொண்ட, நிரந்தர, சுயாதீனமான "அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் கடுமையான குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடரும் அலுவலகம்" ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நீதி அமைச்சருக்கு பரிந்துரைத்துள்ளது.

தொல்பொருள் ஆய்வு குழுக்கள் போன்ற முக்கிய மனித வளங்களை பெற்றுக்கொள்ளும்போது மற்றும் அவ்வாறான வளங்களை ஒதுக்கீடு செய்யும்போது செம்மணி விசாரணையை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சருக்கு பரிந்துரைத்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு, பல மனித புதைகுழிகளை அகழ்வாய்வு செய்வதற்கும் தொல்பொருட்களை மீட்டெடுப்பதற்கும் உதவக்கூடிய தொல்பொருள் நிபுணர்கள் குழு அமைக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஆள் மாறாட்டம் செய்து பஸ்வண்டியில் பணம் கொடுக்காது பிரயாணித்த முன்னாள் பொலிஸ் பரிசோதகர் கொழும்பில் கைது

கனகராசா சரவணன்

கொழும்பில் இருந்து மாரகம பிரதேசத்துக்கு தனியார் பஸ்வண்டியில் பொலிஸ் பொறுப்பதிகாரி என பணம் கொடுக்காமல் பிரயாணித்த முன்னாள் பொலிஸ் பரிசோதகரான போலி பொலிஸ் அதிகாரி ஒருவரை 3ம் திகதி புதன்கிழமை (03) மாரகம பொலிசார் கைது செய்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர் பணிநீக்கம் செய்யப்பட்ட ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இது பற்றி தெரியவருவதாவது, கொழும்பில் இருந்து மாரகம பிரதேசத்துக்கு பிரயாணித்த தனியார் பஸ்வண்டியில் பிரயாணித்த ஒருவரிடம் நடத்துன்ர் பிரயாணம் செய்வதற்கான கட்டணத்தை கேட்டபோது அவர் தான் மாரகம பொலிஜ் நிலைய பொறுப்பதிகாரி கட்டணம் தரமுடியாது என தெரிவித்து பிரயாணத்தை தொடர்ந்துள்ளார்.

இந்த நிலையில் பஸ்வண்டி மாரகமவைச் சென்று நிறுத்தப்பட்டதும் அவர் அதில் இருந்து இறங்கிய போது அவரை பஸ்வண்டி நடத்துனர் பின் தொடர்ந்தபோது அவர் பொலிஸ் நிலையத்துக்குள் உள்நுழைவதை கண்டு அங்கு சென்ற போது பொலிஸ் நிலையத்தின் உண்மையான வேறு ஒரு பொறுப்பதிகாரி ஒருவர் சீருடையில் இருப்பதை கண்டு நடத்துனர் திகைப்படைந்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் நடந்ததை தெரிவித்த தையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி என போலியாக செயல்பட்ட குறித்த நபரை பொலிசார் கைது செய்து விசாரணையில் அவர் கடந்த காலத்தில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையம் ஒன்றில் கடமையாற்றி வந்துள்ள ஜீவந்த என்பவரான இவர் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்பரிசோதகர் என கண்டறிந்தனர்.

இதனை தொடர்ந்து போலியாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி என மோசடியில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் அதிகாரியை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# கிழக்கிலங்கையின் தம்பிலுவில் கோவலன் ஆலயத்தில் கொம்பு முறி விளையாட்டுக்கான விசேட பூஜை



அம்பாறை - தம்பிலுவில் பிரதேசத்தில் பாரம்பரியக் கலைகளுள் ஒன்றான கொம்பு முறி விளையாட்டுக்கான கோவலன் ஆலயத்தில் 8 நாட்கள் இடம்பெறும் விசேட பூஜையின் 5வது பூஜை 2ம் திகதி செப்டம்பர் செவ்வாய்க்கிழமை மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

கோவலன் என்ற பெயரில் தனி ஆலயம் தம்பிலுவில் பிரதேசத்தில் இருப்பினும், சிலப்பதிகாரத்தின் நாயகன் கோவலன் மற்றும் அவன் மனைவி கண்ணகியின் நினைவாக, கண்ணகி அம்மன் கோயில்களும், கோவலன் கண்ணகி தொடர்பான பல இடங்களும் உள்ளன.

மதுரை கோவலன் பொட்டல் மற்றும் தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம் போன்றவை கண்ணகி-கோவலன் கதையுடன் கோவலன், கண்ணகியுடன் வந்து தங்கியிருந்த இடமாக கருதப்படும் ஒரு புனிதத் தலமாகும். இங்கு கண்ணகி சிலையும், கோவலன் தொடர்பான தொடர்புடைய கதைகள் உள்ளன.

கோவலன் இறந்த பிறகு, மக்கள் மத்தியில் கோவலன் கூத்து என்ற நாட்டுப்புறக் கலை வடிவம் இன்றுவரை இடம்பெற்று வருகிறது என்பது அறிந்தவிடையம்.





இதேவேளை தம்பிலுவில் மக்கள் கடும் வரட்சியிலிருந்து நாட்டை பாதுகாத்து மழை பெய்ய வேண்டும் என்றும் நாடு செழிக்க வேண்டும் என்றும் துன்பங்கள் ஒழிய வேண்டும் என்றும் இறைவனிடம் வேண்டி வருடம் தோறும் தம்பிலுவில் மக்கள் இந்த வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். 8 நாட்கள் வடசேரி, தென்சேரி குடிகளினால் விளையாட்டு இடம்பெறுவது வழக்கமாகும்.

கொம்புமுறி விளையாட்டு, கிழக்கிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் முற்றாக அருகிப்போய், கொம்புமுறிப்பு என்றால் என்னவென்றே அறியாத தலைமுறையாக கடந்து போகின்றது.

பிரதேசத்தில், அம்மன் கோயில் சடங்கு, திருக்கோவில் தீர்த்தம், கதிர்காமப் பாதயாத்திரை ஆகிய மூன்று பருவகாலங்களும், சிறியவர் முதல் பெரியவர் வரை, எத்தகைய குதூகலத்தை ஏற்படுத்துகிறதோ, அதே குதூகலத்தை ஏற்படுத்தும் காலவேளையாக, ஒருகாலத்தில் கொம்புமுறிப்பும் விளங்கி இருந்திருக்கின்றது.

இந்த நிலையில் தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலய வீதியில் மழை வேண்டி முன்னெடுக்கும் கொம்புமுறி விளையாட்டு வழிபாடு கண்ணகி அம்மனை முன்னுரித்தி மேற்கொள்ளப்படுகிறது.

அம்மை கொப்பளிப்பான், கண்நோய் போன்ற நோய்களை அம்மன் கோதாரி என்று அழைப்பது தம்பிலுவில் பிரதேச வழக்கம். அதிகமாக இக்காலத்தில் இந்த நோய்கள் அதிகம் பரவுவதாலும் மஞ்சளும் வேப்பிலையாலும் கண்ணகி அம்மனுக்கு விழா நடத்தினால் அம்மன் மகிழ்ச்சி உற்று மழை பொழியும் எனவும் நோய்கள் குறையும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

கண்ணகி அம்மன் காவியம் பாடி இந்த வழிபாட்டை காலம் காலமாக இந்த மக்கள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு காந்தி பூங்காவில் செம்மணிக்கு நீதி கோரிய கையொழுத்து போராட்டம் ஆரம்பித்துவைக்கப்பெற்றது



கிழக்கில் செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு கிழக்கு மண்ணில் உள்ள மனித புதைகுழிகளுக்கானதும் நடைபெற்ற இன படுகொலைக்கு கான சர்வதேச நீதி கோரிய கையெழுத்து போராட்டம் 4ம் திகதி அன்று வியாழக்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இந்த கையெழுத்து போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி சிறிநாத், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், பாக்கியசோதி அரியநேத்திரன், முருகேசு சந்திரகுமார், மட்டு மாநகர சபை முன்னாள் முதல்வர் சரவணபவான் உட்பட தமிழ் தேசிய கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பிரதேச சபை தவிசாளர்கள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு ஆர்வமாக கையெழுத்து இட்டனர்.





# கிழக்கு பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களை பகிடிவதை செய்த 16 மாணவர்கள் சிஜடி யினரால் கைது

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தில் தொழில் நுட்ப பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களை அதே பீடத்திலுள்ள 3ம் ஆண்டு மாணவர்கள் கடந்த 2023ம் ஆண்டு பகிடிவதை செய்துள்ள தையடுத்து பாதிக்கப்பட்ட மாணவன் ஒருவர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து 9 மாணவன்கள் 7 மாணவிகள் உட்பட 16 பேரை 3ம் திகதி புதன்கிழமை மாலை சிஜடி யினர் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் 3ம் ஆண்டில் தொழில்நுபட்ப பீடத்தில் கல்விகற்றுவரும் மாணவ குழு ஒன்று முதலாம் ஆண்டு மாணவர்கள் மாணவிகள் மீது கடந்த 2023ம் ஆண்டு பகிடிவதை மேற்கொண்டனர்.

இதனையடுத்து பகிடிவதையால் பாதிக்கப்பட்ட ஹிம்புட்டான அங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன் தன்மீது கொடூரமாக தாக்கப்பட்டு பகிடிவதை மேற்கொண்டதாகவும் ஏனைய முதலாம் ஆண்டு மாணவிகளை பகிடிவதை செய்து திட்டியதாகவும் 3ம் ஆண்டு மாணவர்குழுவுக்கு எதிராக 26.10.2023 ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்த முறைப்பாட்டையடுத்து குற்ற புலனாய்வு பிரிவினர் குழு ஒன்று சம்பவதினமான 3ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு 16 மாணவர்களையும் அழைத்து அங்கு வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களை பெற்ற பின்னர் மாலை 4.45 மணிக்கு 1998 ஆம் ஆண்டு 20 ஆம் எண் கல்வி நிறுவனங்களில் சோதனை மற்றும் பிற வகையான வன்முறைகள் (தடை) சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

இதில் 9 மாணவன்கள், 7 மாணவிகள் உட்பட 16 பேரையும் ஏறாவூர் நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது தலா ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஒரு இலச்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்து எதிர்வரும் 26 ம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் திடீர் சுகவீனத்தால் பீடிக்கப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் திடீர் சுகவீனம் ஏற்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் 3ம் திகதி அன்றையதினம் உயிரிழந்துள்ளார். உடுவில் - மல்வம் பகுதியை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சின்ராசா (வயது 53) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், இவருக்கு கடந்த 02ஆம் திகதி மலத்துடன் இரத்தம் வெளியேறியது. பின்னர் 03ஆம் திகதி அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவன் உயிரிழப்பு!

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவன் ஒருவர் கடந்த ஆகஸ்ட் 28ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இளவாலையை சேர்ந்த விமலேந்திரன் விதுசன் (வயது 24) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞர் கடந்த 28ஆம் திகதி திடீரென மயக்கமுற்றுள்ளார். இந்நிலையில் இளவாலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். அவருக்கு ஏற்கனவே இருதய வியாதி இருப்பதாக தெரியவருகிறது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளை இளவாலை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# யாழ்ப்பாணத்தில் பட்டம் விட்டு விளையாடிய சிறுவன் உடல் சுகயீனம் ஏற்பட்டு மரணம்!

யாழ்ப்பாணத்தில் பட்டம் விட்டு விளையாடிக்கொண்டிருந்த சிறுவனுக்கு திடீரென உடல் சுகயீனம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த கேதீஸ்குமார் கார்த்திகேயன் (வயது 07) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த சிறுவஆகஸ்ட் 31ஆம் திகதி பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரென உடல் சுகயீனம் ஏற்பட்டது. பின்னர் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் அங்கு மயக்கமுற்றுள்ளார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி செப்டம்பர் 3ம் திகதி மாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவினால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# யாழ்ப்பாணம் வடமராட்சி மருதங்கேணியில் அரச காணியை அடாத்தாக சுவீகரித்த அரச உத்தியோகஸ்தரின் குடும்பத்தை வெளியேறுமாறு உத்தரவு!



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் அரச காணியை அடாத்தாக சுவீகரித்த அரச உத்தியோகத்தரின் குடும்பத்தை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் உள்ள அரச காணி ஒன்று அடாத்தாக எந்தவித அனுமதியும் இன்றி மதில்களை அமைத்து பயன்படுத்தப்பட்டு வந்தது.

குறித்த காணியில் இருப்பவர் எந்தவித அனுமதியும் இன்றி சட்டவிரோதமாக அரச காணியை சுவீகரித்திருப்பதால் உடன் சம்மந்தப்பட்டவர்களை வெளியேற்றுமாறு பல முறை மருதங்கேணி கிராம அலுவலரால் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் குறித்த அரச காணியை மேலும் ஒரு குடும்பம் உரிமை கோரி வந்ததால் பல முரண்பாடுகள் தோன்றுவதாலும் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் மருதங்கேணி கிராம மட்ட அமைப்புகளாலும் தெரியப்படுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில் அரச காணியை அடாத்தாக பிடித்திருப்பது உறுதியாகிய நிலையில் குறித்த காணியை சுவீகரித்துள்ள அரச உத்தியோகத்தரின் குடும்பத்தை ஒரு மாத காலப்பகுதிக்குள் காணியை கிராம அலுவலரிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறுமாறு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போது நல்லூர் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக பதவி வகிக்கும் குறித்த அதிகாரி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக (ADP) இருந்த காலப் பகுதியில் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து குறித்த அரச காணியை அடாத்தாக பிடித்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

(உறுதிப்படுத்த வேண்டுமானால் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் - மருதங்கேணி G.S சுபேஷ் குமார் - 077 743 7153)



# "மருத்துவர் ஆவதே எனது இலக்கு" என யாழ்ப்பாணத்தில் சாதனை படைத்த மாணவன் தெரிவிப்பு!



2025 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் தரம் 5 பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

அந்த வகையில், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் ஆனந்தசோதி லக்சயன் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலமாக முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மாணவன் ஆனந்தசோதி லக்சயன் 194 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும், யாழ். மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் லதாநந்தினி சிவபாதம் தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவனின் தந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைத்தியராக கடமையாற்றி வருகின்றார். இந்நிலையில் மருத்துவராவதே தனது இலக்கு என குறித்த மாணவனும் தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்றது.

நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 2,787 பரீட்சை நிலையங்களில் மொத்தமாக 307,951 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய கல்விச் சாலையான செட்டித்தெரு மெதடிஸ்ட் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை சாதனை!






யாழ்ப்பாணம் செட்டித்தெரு மெதடிஸ்ட் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையானது வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்துள்ளது.

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் 30 மாணவர்கள் புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்த நிலையில் 10 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று இவ்வாறு சாதனை படைத்துள்ளதாக பாடசாலையில் அதிபர் தெரிவித்துள்ளார்.

குறித்த பாடசாலையானது மிகவும் சிறிய பாடசாலையாக காணப்படுகின்றது. கடந்த காலங்களில் இந்தப் பாடசாலைக்கு போட்டியாக பெரிய பாடசாலைகள் காணப்பட்டதால் மாணவர்கள் அங்கே செல்வதால் குறித்த பாடசாலைக்கு மாணவர்களை உள்ளீர்ப்பது சிரமமாக இருந்ததாகவும், தற்போது கண்டுள்ள வளர்ச்சியால் போட்டி போட்டுக் கொண்டு இந்த பாடசாலையில் மாணவர்களை சேர்ப்பதற்கு பெற்றோர் மும்முரம் காட்டுவதாகவும் அதிபர் தெரிவித்துள்ளார்.

# இவ்வார ராசிபலன்

**05-09-2025 வெள்ளி தொடக்கம் 11-09-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** பெத்தவங்களோட ஆசி கிடைக்கும் வாரம். வீடு தேடி வெற்றி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன் பொருள் சேரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் திருப்தி தரும். புதிய நட்பு உருவாகும்.
பழையக்கடன் தீரும். குதூகலம் சேரும். எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். முயற்சிகள் பலன் தரும். காரிய வெற்றி கிட்டும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெகுமதி கூடும். குதூகலமான மனநிலை காணப்படும். ஆனந்தம் பெருகும். செயலில் துணிவு கூடும். குடும்ப உறவு பலப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: 6,8,1,2
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,H




**ரிஷபம்:** அருளும், பொருளும் சேரும் வாரம். வெகுமதி பெருகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் முடிவுகள் உண்டு. அரசியலில் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். நினைத்த செயலை சாதித்துக் காட்டுவீர்கள். பொதுவிஷயங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கடன் சுமையில் இருந்து விடுபடுவீர்கள். நண்பர்கள் உங்களை தேடி வருவார்கள். வாய்ப்புக்கள் பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு உயரும். பழைய கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. பணப்பற்றாக்குறை நீங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 1,4,2,5
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**மிதுனம்:** பாசமும், நேசமும் பெருகும் வாரம். மனக்குழப்பங்கள் தீரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைக-ளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். எதிர்ப்புகள் குறையும். ஆதாயம் பெருகும். உடல்நலம் சிறக்கும். தேக பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். திருமண பேச்சு கைகூடி வரும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளகளுக்கு மனநிறைவு ஏற்படும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழில் முயற்சி வெற்றி தரும். குடும்பத்தில் அமைதி உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பங்குசந்தையில் லாபம் தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பண-வரவு சுமாராக இருக்கும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கடன்சுமை குறையும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,3,1,5
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,P




**கடகம்:** வளமும், ஜெயமும் கிடைக்கும் வாரம். பிரார்த்தனை பலன் கொடுக்கும். கல்வியில் மேன்மை உண்டு. உடல் பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். வங்கி சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். அலைச்சல் அதிகரிக்கும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேலை வாய்ப்புக் கூடும். குடும்ப பிரச்சனைகள் தீரும். அற்புத வாய்ப்பு கிட்டும். உடல்வலியிலிருந்து விடுதலை அடைவீர்கள். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளிடத்தில் அன்பு அதிகரிக்கும். பொன்னான நேரம் உங்களை வந்து அடையும். நினைத்த காரியங்களில் வெற்றி நிகழும். இனிதான செய்திகள் கூடி வரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். நாவடக்கம் தேவை. மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். பங்குத்தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வு அமையும். தாய்வழி உறவில் கவனம் தேவை. கலைத்தொழிலில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். சேமிப்பு உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**"ஜோதிட மகரிஷி"**
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: **0091-9840160068**
**9940431377**




**சிம்மம்:** நிதர்சனமான லாபம் கிடைக்கும் வாரம். உன்னதமான காலம். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். நன்மைகள் பெருகி வரும். பொருளாதார வாய்ப்பு தேடி வரும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். எதிர்மறையான எண்ணங்கள் விலகும். மனஅமைதி உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். குதூ கல எண்ணம் அதிகரிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும்.
வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். மனக்கசப்பு வந்து நீங்கும். சில வாய்ப்புகள் தேடி வரும். தொழிலில் அபிவிருத்தி அடையும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். சகோதரியினால் நன்மை உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. அரசு வழியில் ஆதாயம் உண்டு. துன்பங்கள் அகலும். தீய எண்ணம் விலகும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பலன் தரும். பங்குச்சந்தை கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். மனநிம்மதி கூடும். மருத்துவச் செலவு குறையும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். காதல் கண்ணியம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,4
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J




**கன்னி:** மரபை மீறி பேசிய உறவு பாராட்டும் வாரம். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணத்தால் பணவரவு உண்டு. பிள்ளைகள் எண்ணம் பூர்த்தியாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். வார்த்தைகளில் கவனம் தேவை. வாய்ப்புகள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். பருப்பு தானம் பாவம் போக்கும். நிம்மதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் தரும். செய்தொழில் சிறக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். கொடுக்கல், வாங்கல் சுமூக நிலை ஏற்படும். திருமண பாக்கியம் கைகூடி வரும். புதிய முயற்சியை தள்ளிப் போடுங்கள். தெம்பும், தைரியமும் கூடும். தாராளமான வருமானம் உண்டு. பொதுப்பிரச்சனைகள் விலகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஹய்காளி, அதிர்ஷ்ட எண்: 3,1,9,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,N




**துலாம்:** நியாயமான ஆசைகள் நிறைவேறும் வாரம். கையிருப்பு கரையும். வெகுமதி கூடும். தொழில் வாய்ப்புகள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். தங்க நகைகள் சேரும். கடன் தொல்லை நீங்கும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். புதிய முயற்சிகள் பலன் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். புகழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். ஞாபக திறன் கூடும். சுபகாரியம் கைகூடும். குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிட்டும். தொழில்முயற்சி வெற்றி தரும். பணவரவு உண்டு. காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதிதேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,W




**விருச்சிகம்:** செல்வமும், புகழும் கிடைக்கும் வாரம். பழையக் கடன் வசூலாகும். உறவினர் வருகை உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. அன்னதானம் ஆரோக்கியம் தரும். குதூகலமான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காரியங்கள் வெற்றி முகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். வழிபாடு மாற்றம் தரும். நண்பர்களால் மதிப்பு உயரும். பணியில் இடமாற்றம் தேவை. வாழ்க்கை தரம் உயரும். பேச்சில் கவனம் தேவை. வரவுகள் திருப்தி தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். உதவிகள் குவியும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 6,4,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J

(தொடர்ச்சி 22 பக்கம்)




# விஷ்ணு விஷால் நடிக்கும் திரைப்படம் "கட்டா குஸ்தி 2"

உலக செய்திகள்
World News

தமிழ் சினிமாவில் முக்கியமான நடிகர்களில் ஒருவராக வலம் வரும் விஷ்ணு விஷால். கடந்த 2022ம் ஆண்டு விஷ்ணு விஷால், ஐஸ்வர்யா லக்ஷ்மி ஆகியோரின் நடிப்பில் "கட்டா குஸ்தி" திரைப்படம் வெளியானது. இந்த படத்தை செல்லா அய்யாவு இயக்கி இருந்தார். காமெடி கலந்த கதைக்களத்தில் வெளியான இந்த படம் ரசிகர்கள் மத்தியில் ஏகபோக வரவேற்பை பெற்றது. இப்படத்துக்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைத்திருந்தார். ரூ.5 கோடி பட்ஜெட்டில் உருவான இப்படம் ரூ.30 கோடிக்கும் அதிகமான வசூலை குவித்தது. இப்படத்தின் இயக்குனர் செல்லா அய்யாவுடன் நடிகர் விஷ்ணு விஷால் மீண்டும் கைகோர்த்து "கட்டா குஸ்தி 2" எடுக்கவுள்ளனர். இதனை விஷ்ணு விஷால் மற்றும் வேல்ஸ் பிலிம் இண்டர்நேஷ்னல் நிறுவனம் இணைந்து தயாரிக்கிறது. படத்தின் கதாநாயகியாக ஐஷ்வர்யா லட்சுமி நடிக்கிறார். மேலும் முனிஷ்காந்த், காளி வெங்கட் மற்றும் கருணாகரன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கின்றனர். படத்தின் இசையை ஷான் ரோல்டன் மேற் கொள்கிறார்.



# அமெரிக்காவுக்கு எதிராக சதி — சீனா மீது டிரம்ப் பாய்ச்சல்

சீனாவின் பிரமாண்ட ராணுவ அணிவகுப்பில் ரஷ்ய அதிபர் புதின், வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் ஆகியோர் கலந்து கொண்டதை அமெரிக்க அதிபர் டிரம்ப் விமர்சித்து உள்ளார். இதுதொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியதாவது: சீனாவுக்கு வெளிநாட்டு படையெடுப்பாளர்களிடமிருந்து சுதந்திரம் கிடைக்க, அமெரிக்கா அளித்த மகத்தான ஆதரவையும் சிந்திய ரத்தத்தையும் சீன அதிபர் ஜின்பிங் குறிப்பிடுவாரா இல்லையா என்பதுதான் பதிலளிக்கப்பட வேண்டிய பெரிய கேள்வி. சீனாவின் வெற்றி மற்றும் பெருமைக்கான தேடலில் பல அமெரிக்கர்கள் தங்கள் இன்னுயிரை நீத்தனர். அவர்களின் துணிச்சல் மற்றும் தியாகத்திற்காக அவர்கள் சரியாக மதிக்கப்படுவார்கள் மற்றும் நினைவுகூரப்படுவார்கள் என்று நம்புகிறேன். அதிபர் ஜின்பிங்கிற்கும், சீனாவின் அற்புதமான மக்களுக்கும் ஒரு சிறந்த, நீடித்த கொண்டாட்ட நாள் அமையட்டும். "அமெரிக்காவுக்கு எதிராக நீங்கள் சதி செய்யும்போது புதின் மற்றும் கிம் ஜாங் உன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுங்கள்" என்று தெரிவித்தார்.

# இந்தியா உடனான உறவை டிரம்ப் துண்டிக்க இதுதான் காரணம் — அமெரிக்க முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் குற்றச்சாட்டு



இந்தியாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார், இதனால், இந்தியா அமெரிக்கா இடையிலான வர்த்தக உறவில் விரிசல் ஏற்பட்டு உள்ளது. டிரம்பின் இந்த முடிவால் இந்தியா தற்போது சீனாவிடம் வர்த்தக உறவை வலுவாக்க தொடங்கியுள்ளது. அதேபோல, ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டிலும் வர்த்தக உறவை வலுப்படுத்த வேண்டும் என்று உறுப்பு நாடுகள் மத்தியில் பேசப்பட்டது. இந்தியாவின் இந்த நடவடிக் கையால் அமெரிக்காக்கு சற்று அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. டிரம்பின் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைக்கு அமெரிக்காவிலும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவுடன் மோதல் போக்கை அதிபர் டிரம்ப் கடைபிடிப்பதற்கு, அவரது தனிப்பட்ட வணிக நலன்களே காரணம் என அமெரிக்காவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலிவன் குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது: தொழில்நுட்பம், திறமை, பொருளாதாரம் போன்ற பல துறைகளில் நம்முடன் இணைந்து செயல்பட வேண்டிய முக்கிய நாடு இந்தியா. அதனால், இந்தியாவுடன் உறவை வலுப்படுத்த அமெரிக்கா எப்போதும் பாடுபட்டது.

# பாகிஸ்தான் துணை ராணுவப் படை தலைமையகம் மீது போராளிகள் தாக்குதல் — 6 ராணுவ சிப்பாய்கள் மரணம்



கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள துணை ராணுவப்படையின் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பாகிஸ்தான் ராணுவ சிப்பாய்கள் பலியாகினர். இந்த சம்பவத்தை தொடர்ந்து நடத்தப்பட்ட பதில் தாக்குதலில் 5 போராளிகள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது. பன்னு மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் அமைப்பைச் சேர்ந்த போராளிகள், வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை சுவரில் மோதி கூட்டாட்சி கான்ஸ்டாபுலரி தலைமையகத்தின் பாதுகாப்பை மீற முயன்றபோது இந்தத் தாக்குதல் நடந்ததாக ராணுவ ஊடகப் பிரிவு ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. இந்த தற்கொலை குண்டுவெடிப்பினால் ராணுவப்படையின் தலைமையகத்தின் சுவரின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. மேலும் அருகிலுள்ள பொதுமக்கள் உள்கட்டமைப்பை சேதப்படுத்தியது. இதில் மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர். இருப்பினும், பாதுகாப்புப் படையினரின் "விழிப்புடன் மற்றும் உறுதியான" பதிலடியால், தாக்குதல் நடத்தியவர்களின் முயற்சிகள் விரைவாக முறியடிக்கப்பட்டன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பலுசிஸ்தானில் அரசியல் பேரணியில் தற்கொலைப்படை தாக்குதல் — 25 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் பலூச் தலைவர் அதாவுல்லா மெங்கலின் நினைவு தினத்தை முன்னிட்டு, பேரணி ஒன்று நடந்தது. பேரணியில் பங்கேற்ற மக்கள் அனைவரும் வீடு திரும்ப தயாரான போது திடீரென தற்கொலை படை தாக்குதல் நடந்தது. மக்கள் கூடியிருந்த பகுதியில் குண்டு வெடித்ததில், 25 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில், பலூச் தலைவர் அதாவுல்லா மெங்கலின் மகன், அக்தர் மெங்கல், பாதுகாப்பாக தப்பினார். மேலும் 30 பேர் பலத்த காயம் அடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த குண்டுவெடிப்பு குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். வடமேற்கு பாகிஸ்தானில் ஒரு துணை ராணுவ தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு பாதுகாப்பு வீரர்கள் மற்றும் ஆறு பயங்கரவாதிகள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

## வீணாவின் கவிக்கணை

உன்
எண்ணங்கள் சிறப்பாக
இருப்பின்,
உன்
செயல்களும்
சிறப்பாகவே அமைந்திடும்,
நீ
அடுத்தவரை குறைசொல்லி
அவமானப்படுத்தி
துன்புறுத்துபவனாயின்
உன்
வாழ்க்கை சிறப்படைவது
என்பது என்றுமே
கேள்விக்குறியே!

# மரண அறிவித்தல்

பிறப்பு: 03-17-1927
இறப்பு: 09-03-2025



யாழ்ப்பாணம் புங்குடுதீவு தட்டயம்புலம்பதி 10ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 3ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கனடா (யுதயஓ) ல் வாழ்ந்துவந்தவருமான வே.க.சோமசுந்தரம் சின்னத்தங்கம் அவர்கள் வளர்பிறை ஏகாதசிதிதி ஆவணி 18ம் நாள் (செப்டெம்பர் 03) புதன்கிழமை மாலை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு .திருமதி தெருவுச்சிவப்பி நாகனாதர் கந்தையா செல்லாச்சி தம்பதிகளின் அருமை மகளும்,
அனுமார் கந்தையா அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வே.க. சோமசுந்தரம் (சமாதான நீதவான், முன்னாள் யாழ்மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்) அவர்களின் அன்பு மனைவியும்,
காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, குமரேசு, முத்தம்மா, பொன்னம்மா, வள்ளியம்மை, சின்னத்துரை (முன்னாள் கொழும்பு ஆமர்வீதி வர்த்தகர்) ஆகியோரின் அன்பு சகோதரியும்,
யசோதாதேவி(கனடா), கிருஷ்ணகுமாரி(ஜேர்மனி), சச்சிதானந்தன் (ஓய்வு நிலை கிராமசேவை அலுவலர்), சதானந்தன்(சுவிஸ்), கதிர்காமநாதன்(கனடா), பத்மாஜனதேவி(சுவிஸ்), பேரின்பநாயகி(சுவிஸ்), விவேகானந்தன்(கனடா), லிங்கேந்திரன்(சுவிஸ்), லெட்சுமிதேவி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும்,
காலஞ்சென்றவர்களான வே.சுப்பையா, சின்னம்மா, சின்னத்தம்பி, (RMS) வல்லிபுரம், செல்லத்தம்பி, செல்லம்மா, சண்முகநாதியம்மா, வே.க குமாரசாமி, வே.க நல்லதம்பி (சிவகுரு), பராசக்தி, வே.க சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,
காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன்(கிராம சேவையாளர்), பாலசுப்பிரமணியம் மற்றும் மகாலெக்சுமி, அமிர்தராணி, கமலவதனி, தர்மராஜா, பத்மநாதன், ரஞ்சினி, லிங்கேஸ்வரி, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,
ஜெகஜீவன் (Remax Blue Force Realty), நிஜந்தி, பிரியதர்சினி, சசிகுமார், குகதர்சினி, சிவனேசன், ஜெகனாத்(LAND KING), செந்தூரி, ஸ்ரீகலா, பிரசன்னாத், மிதுலா, மனுவேல், சகானா அனிஸ்ரன், ஷலினி, கவாஸ்கர், யுவானி, கபில்ஸ்கர், தர்ஷிகா, பானுஷன்(Royal Premium Cars), பிரவீனா, காயத்திரி, கனிஷ்ரன், ரதுஷன், கஜானி, மதுரா, ரட்னேஸ், சஞ்சீவ், கார்த்திகா, ரஜீவ், நிதர்சன், நிதார்த்தன்,ரதிஜன், விதிஜன், கேசிந்த், ஆருஜா, ஆரபி, நிரோஜன்-நதீஷா, ராகுல்-யதுஷா, அட்சரா ஆகியோரின் பேத்தியும்,
காலஞ்சென்றவர்களான ஏ.ஞ மணியம்(மலேசியா), காமாட்சி மற்றும் பஞ்சரெத்தினம்(கனடா)
காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், கனகேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும்,
அக்கீரா, அர்ஜுன், சபீனா, சயானா, அவிகா, அட்விகா, ரீனா, அலிசா, பிறைன், மிகான், லியானா, மிலான், சாத்விக், ஹேமானிகா, அவிஷ், றியானா, திசான் ஆகியோரின் அன்புப்பூட்டியுமாவார்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை 09-07-2025 மாலை 4:00-9:00 மற்றும் திங்கட்கிழமை 09-08-2025 காலை 9:00-11:00 பார்வைக்காக *St John's Dixie Cemetery & Crematorium, 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5* ல் வைக்கப்பட்டு பின்னர் காலை 11:15 மணியளவில் அதே இடத்தில் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் தகனம் செய்யப்படும்.

## திருமதி வே.க. சோமசுந்தரம்
## சின்னத்தங்கம்

தகவல்: குடும்பத்தினர்.

## இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** பொறுப்பும், சிறப்பும் சேரும் வாரம். தொல்லைகள் ஒழியும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். பணவரவு பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். நிம்மதியான காலம். விரயங்கள் கூடும். மருத்துவச் செலவுகள் குறையும். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கெடும். ஆண்களின் அதிகாரம் உயரும். சாதகமான வாய்ப்பு அமையும். வாகன மாற்றம் ஏற்படும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,7,1,5
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,X




**மகரம்:** பெத்தவங்களால் பெருமை சேரும் வாரம். சோம்பல் அதிகரிக்கும். வருமானம் திருப்தி தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். முதலீடுகளில் கவனம் தேவை. சந்தோஷம் குடிகொள்ளும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றியைத் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். மதிப்புகள் கூடும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். அனுகூலச் செய்தியால் மனம் மகிழும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகள் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை கூடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிட்டும். எடுத்த முயற்சி வெற்றி தரும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். ஆன்மீகத்தில் ஆர்வம் கொள்வீர்கள். காதல் கை கூடும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,2,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** மற்றவர்களால் மரியாதை கிடைக்கும் வாரம். ஆனந்தம் பெருகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். மனைவி, பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். பொது இடங்களில் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். உடல்சோர்வு ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். மனநிம்மதி தரும். அலைச்சல் அதிகரிக்கும். புது முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பெண்களுக்கு பெருமை சேரும் விதமாக அமையும். பயணங்களால் பலன் பெறுவீர்கள். பொறாமைகள் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 4,3,1,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,G




**மீனம்:** நேர்த்தியும், கீர்த்தியும் கிடைக்கும் வாரம். தான தர்மங்கள் பலன் தரும். மனக்கசப்பு வந்து நீங்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. கணவன், மனைவி உறவு மேம்படும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உடல்நலம் மேம்படும். வாகனச்செலவு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். வீண் குழப்பங்கள் வந்து போகும். காதல் பிரிவை ஏற்படுத்தும். கோதுமை தானம் தாய்நலம் சேர்க்கும். கஷ்டங்கள் மாறும். வீண் வம்பு அகலும். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சுக்கள் ஏற்படும். திறமைகள் வெளிப்படும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மனநெருக்கடிகள் தீரும். நல்லோர்களின் சந்திப்புக் கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வீண் செலவுகளை தவிர்க்கவும். புதிய வாகனங்கள் வாங்க நேரிடும். பெண்களுக்கு பெருமையான நாளாக அமையும். பிரார்த்தனையால் பயன் பெறுவீர்கள். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். புதுமுயற்சி பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கடன் சுமைகள் தீரும். உதவிகள் கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 7,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J

கனடிய செய்திகள் Canadian News

# புதிய கல்வியாண்டு தொடங்கும் இவ்வேளையில் ஒன்ராறியோ அரசாங்கம் முன்னரைவிட அதிக அளவில் கல்விக்கான நிதியை வழங்குகிறது



2025-26 புதிய கல்வியாண்டில் புதிய பள்ளிகள், விரிவுபடுத்தப்பட்ட வகுப்பறைகள், மாணவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கென ஒன்ராறியோ அரசு முன்னெப்போதுமில்லாத அளவில் 30.3 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

இந்நிதியுதவியின் ஒரு பகுதியாக மாநிலமெங்கும் 41 புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட பாடசாலைகளை ஒன்ராறியோ முன்னேற்றுவதுடன் அவற்றில் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் நவீன கற்றல் வசதிகளையும் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இது பற்றி அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க நிதி ஒதுக்கீடு, எமது மாணவர்களுக்கு பாதுகாப்பான, நவீன மயப்படுத்தப்பட்ட வகுப்பறைகளையும், மாணவர்கள் முன்னேற்றத்துக்கு வேண்டிய உபகரணங்கள் அவர்களுக்குக் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும்" எனத் தெரிவித்ததுடன், மேலும் அரசாங்கத்தின் அடிப்படை தொடர்பான அணுகுமுறை இளையோர்களை அவர்களின் தொழில்சார் மற்றும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குத் தயார்படுத்தும் என்பதையும் குறிப்பிட்டார்.

இந்நிதியுதவி மாணவர்களின் பாதுகாப்புக்கும், பள்ளிகளில் நவீன கற்றலுக்கான வளங்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ள வழியமைத்துக் கொடுப்பதனூடாக ஸ்காபரோ வாழ் மக்களுக்கு புதிய நம்பிக்கையை வழங்கும்.

இந்நிதியின் மூலம், ஒன்ராறியோ முழுவதும் உள்ள மாணவர்கள் மேம்படுத்தப்பட்ட வசதிகளையும், அதிக வசதி வாய்ப்புகளையும் வரும் கல்வியாண்டுக்கான வலுவான அடித்தளத்தையும் பெற்றுப் பயனடைவர்.

# ரொறன்ரோ கத்தோலிக்க மக்களின் வருடாந்த பெருவிழா

ரொறன்ரோ தமிழ் கத்தோலிக்க மக்களின் வருடாந்த பெருவிழா, எதிர்வரும் செப்ரம்பர் 14ம் திகதி, நடைபெறவுள்ளது. புதுமைகளின் தாயான புனித வேளாங்கன்னி அன்னை என அறியப்பட்ட, தூய ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழா, இவ்வருடமும் வழமைபோன்று மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஸ்காபரோவில், பேர்ச்மவுண்ட் மற்றும் டன்போர்த் அவனியூ வீதிகள் சந்திக்கும் இடத்தில், இலக்கம் 131 பேர்ச்மவுண்ட் வீதியில் அமைந்துள்ள தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில், மாலை 3:30 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகும். திருப்பலியைத் தொடர்ந்து, ஆலயத்திற்கு வெளியே திருச்சுரூபப் பவனி மற்றும் அன்னையின் ஆசீர்வாதம் இடம்பெறும். அனைத்து பக்தர்களையும் கலந்துகொண்டு அன்னையின் ஆசிபெற அழைக்கிறோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:

அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ் -- (416) 264-6544

-----

"I think there is something more important than believing: Action! The world is full of dreamers, there aren't enough who will move ahead and begin to take concrete steps to actualize their vision."

- W. Clement Stone

"”வாழ்வது ஒருமுறை, வாழ்த்தட்டும் தலைமுறை!"

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மாநகர எல்லைக்குள் பாரிய விளம்பர பலகை நாட்டப்பட்டமை எமக்கு தெரியாது – முதல்வர் மற்றும் ஆணையாளர் தெரிவிப்பு!

## இனந்தெரியாத நபர்களின் "இலஞ்ச விளையாட்டு" தொடங்கிவிட்டதா என்று சந்தேகம்!

யாழ். மாநகர சபையின் அனுமதியில்லாமல் பிரதான வீதி ஒன்றில் நாட்டப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பலகை தொடர்பில் தாம் அனுமதி வழங்கவில்லை என யாழ் மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளர் சபைக்கு தெரிவித்தனர்.

இன்று வியாழக்கிழமை யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் சபை உறுப்பினர்களான தர்ஷானந்த் மற்றும் நிசாந்தன் ஆகியோர் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பிலே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது, அண்மையில் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வீதிக்கு மேலாக தனியார் நிறுவனம் ஒன்றின் பாரிய விளம்பரப் பலகை ஒன்று இரவோடு இரவாக நிறுவப்பட்டது.

குறித்த விளம்பர பதாதை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியது.

சபையில் அனுமதி பெறாது குறித்த விளம்பர பலகை பொருத்தப்பட்டமை தொடர்பில் சபை உறுப்பினர்களால் மாநகர முதல்வருக்கு தெரியப்படுத்திய நிலையில் மறுநாள் இரவு குறித்த பதாதை இரவோடு இரவாக அகற்றப்பட்டது.



இவ்வாறான நிலையில் சபை அமர்வில் குறித்த விடயம் பேசு பொருளாக அமைந்த நிலையில் குறித்த விளம்பர பலகை அமைப்பதற்கு தாங்கள் அனுமதி வழங்கவில்லை என யாழ் மாநகர முதல்வர் மதிவதனி மற்றும் ஆணையாளர் கிஷ்ணேந்திரனாகியோர் சபையில் தெரிவித்தனர்.

அதுமட்டுமல்லாது குறித்த விளம்பர பலகை அமைப்பதில் ஊழல் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளதாகவும் அது தொடர்பில் கணக்காய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடு அனுப்பப்படும் என முதல்வர் தெரிவித்ததுடன் உறுப்பினர்கள் சார்பாக இலங்கை இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு கையளிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.





# புதிதாக பதவியேற்ற வடக்கு கடற்படை தளபதிக்கும் வடக்கு ஆளுநருக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பு!

வட மாகாண கடற்படைத் தளபதியாக புதிதாக ரியர் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே அவர்கள் பதவியேற்றுள்ளார்.

இவ்வாறு பதவியேற்ற கடற்படை தளபதி, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களை 4ம் திகதி வியாழக்கிழமையன்று சந்தித்து உரையாடினார்.



# மண்டைதீவு புதைகுழிக் கிணற்றில் அகழ்வை மேற்கொள்ள வலியுறுத்தி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு!

மண்டைதீவு படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய உடலங்கள் புதைக்கப்பட்டதாக கூறப்படும் கிணறுகளை அகழ்ந்து, குறித்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் வெளிக் கொணரப்படுவதுடன் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியும் பரிகாரமும் வழங்கப்பட வேண்டும் என்று கோரி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று (04.09.2025) பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரில்டா என்பவர் வேலணை பிரதேச சபையின் உறுப்பினரான சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோரால் வேலணை பிரதேச சபையின் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் உறுப்பினரான திருமதி. அனுசியா ஜெயகாந்த், அகில இலங்கை தமிழ் கங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களான கருணாகரன் நாவலன் மற்றும் திருனாவுக்கரசு சிவகுமாரன், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான செந்தமிழ்ச்செல்வன் திருக்கேதீஸ்வரன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான மங்களேஸ்வரன் கார்த்தீபன் ஆகியோரது பிரசன்னத்துடன் இருவேறு முறைப்பாடுகள் இன்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் (04.09.2025) பதிவு செய்துள்ளனர்.

35 வருடங்களுக்கு முன்னர் ஆகஸ்ட் மாதம் 25 மற்றும் 26 ஆகிய நாள்களில் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் பாரிய மனிதப் படுகொலை நிகழ்த்தப்பட்டதாகவும், இதன்போது 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப்பட்டிருந்ததுடன் மேலும் பலர் கொல்லப்படும் இருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 45 இற்கும் அதிகமான உடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருப்பதுடன் அதற்கான வாழும் சாட்சியங்கள் உறுதியாகவும் இருக்கின்றன. அதேபோன்று அதற்கு அயலில் உள்ள பாடசாலை கிணறு ஒன்றுக்குள்ளும் உடலங்கள் இருக்கின்றன.

இந்தநிலையில் குறித்த படுகொலை சாட்சியமாக உறவுகளை பறிகொடுத்த குறித்த கிணற்றை அகழ்ந்து உடலங்களை வெளிக்கொணர்ந்து உண்மைகள் வெளி உலகுக்கு வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே குறித்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

முன்பதாக கடந்த மாதம் 20 ஆம் திகதி வேலணை பிரதேச சபையில் குறித்த புதைகுழியை அகழ்ந்து உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையில் அனைத்து உறுப்பினர்களின் ஏக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca

# UTHAYAN உதயன்




உதயம் 1535 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 5, 2025

# இலங்கை தீவில் தமிழருக்கு நீதி இல்லை என்பதை ஜனாதிபதி அனுரவின் யாழ்ப்பாண விஜயம் உறுதிப்படுத்தியது என்கிறார் கஜேந்திரகுமார் எம். பி

யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க செம்மணி மனிதப் புதை குழியை பார்வையிடாமல் சென்றதும் அது தொடர்பில் தெரிவித்த கருத்தும் இலங்கை தீவில் தமிழருக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்ற உண்மையை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

2ம் திகதி செவ்வாய்க்கிழமை செம்மணிப் பகுதியில் இடம்பெற்ற வன்மம் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொள்வதற்கு முன்னதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)



# "கனடிய மகளிர் கழகம்" பிரதி வியாழன் தோறும் இரவு நடத்தும் மருத்துவர் போல் ஜோசேப்பின் மருத்துவ கருத்தரங்கு 100 வாரங்களை எட்டியது



கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் "கனடிய மகளிர் கழகம்" **(Canadian Women Council)** சார்பாக ஒவ்வொரு வியாழன் தோறும் இரவு 9 மணி முதல் 10 மணி வரை கடந்த சில வருடங்களாக மருத்துவர் போல் ஜோசேப் அவர்களினால் நடத்தப்பட்ட நடத்தப்பட்டு வருகிற மருத்துவ கருத்தரங்கு 100 வாரங்களை வெற்றிகரமாக நிறைவு செய்ததை முன்னிட்டு கடந்த வியாழன் அன்று மருத்துவர் போல் ஜோசேப் அவர்களுடைய கிளினிக்கில் நூறாவது வார நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது.பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் தலைமையில், சமூகச் செயற்பாட்டாளர் குயின்ரஸ் துரைசிங்கம் அவர்கள் முன்னிலைவகித்தார் .எழுத்தாளர் கவிஞர் அக்ணி சுரேஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வுகளை சிறப்பித்தார்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# நீதியா அபிவிருத்தியா? தீர்வா அபிவிருத்தியா? அல்லது அபிவிருத்திதான் தீர்வா?

## – யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்! –



"நாங்கள் கேட்டது சர்வதேச விசாரணையை. அனுர தருவது சர்வதேச விளையாட்டு மைதானத்தை". என்று முகநூலில் ஒரு பதிவு காணப்பட்டது. தமிழ் மக்கள் இறந்த காலத்துக்கு பொறுப்புக் கூறுவதற்காக அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் அரசாங்கமோ "இதோ உங்களுக்கு விளையாட்டு மைதானம் இதோ உங்களுக்கு மயிலிட்டித் துறைமுகம் இதோ உங்களுக்கு வட்டு வாகல் பாலம்" என்றிவ்வாறாக அபிவிருத்தித் திட்டங்களை முன்வைக்கின்றது. (.தொடர்ச்சி 8ம் பக்கம்)

# ஜெனீவா இராஜதந்திர போரில் ஜெயிக்கப் போவது யார்...?




*"நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலில் அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு,கிழக்கு தமிழ் மக்கள் அளித்த பேராதரவே ஜெனீவாவில் இலங்கை அரசுக்கு எதிராக தமிழ் தரப்புக்கள் அமைக்கும் வியூகங்களை எல்லாம் உடைத்தெறியப் போகின்றது. ---கே.பாலா*

60 ஆவது ஜெனீவா கூட்டத் தொடர்,எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகி ஒரு மாதம் வரையில் நடைபெறவுள்ளது.ஜெனீவா அமர்வு நெருங்கிக்கொண்டிருக்கும் நிலையில் அதனை எதிர்கொள்வதற்காக இலங்கையில் சிங்களவர்,தமிழர் தரப்புக்கள் ஏட்டிக்கு போட்டியாக தங்களை தயார்படுத்தி வருகின்றன. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# இலங்கை ராஜபக்ச "ராஜ்யத்தில் நான்கு "திருடர்கள்" மாத்திரம் இல்லை.

## எண்ணிக்கையில் நாற்பதற்கு மேலாகலாம் என்பதுதான் அநுர அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு



நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் கழுத்தில் இப்படி துண்டு கட்டி இருப்பவர்கள் மக்கள் பணத்தை கொள்ளையடித்த மகா மகா திருடர்கள் .

சசீந்திர ராஜபக்ஷவுக்கு 4000 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகள் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி மோசடி வழக்கில் தற்போது கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷவிடம், ரூபாய் 4000 கோடி பெறுமதியான சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

